# මහපොළ උසස් අධ්‍යාපන ශිෂ්‍යත්ව භාර අරමුදල
## மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்
## Mahapola Higher Education Scholarship Trust Fund

# 2018

## වාර්ෂික වාර්තාව හා ගිණුම්
## வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்
## ANNUAL REPORT & ACCOUNTS

# 2018

## வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்

மஹபொல உயர்க்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

# தூர நோக்கு

வறுமை ஒழிப்பை இலக்காகக்கொண்ட கற்றறிந்த சமூகமொன்றை தோற்றுவித்தல்

# இலக்கு

சலுகைகள் அற்ற இளைஞர்களுக்கு உயர் கல்வி அலுவல்களை நிறைவு சய்துகொள்வதற்கு புலமைப் பரிசில் வழங்குதல் மற்றும் உயர் கல்விக்கான வசதிகளை ஏற்படுத்துவதன் ஊடாக சம வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்''

# செயற்பணி

- இளைஞர்களுக்கு உயர்கல்விக்கான வசதிகளை ஏற்படுத்தல்.
- இரண்டாம் நிலை கல்வியை திருப்திகரமான முறையில் நிறைவு செய்துள்ள உதவி பெறுவதற்குப் பொருத்தமான இளைஞர்களுக்கு உயர்கல்வி நிறுவகமொன்றில் தனது கல்விசார், கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வியைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக உதவி வழங்குதல்.
- இளைஞர்களின் ஆற்றல்களை விருத்தி செய்வதற்காக தொழில் பயிற்சி நிறுவகங்களை நிறுவுதல் மற்றும் அவற்றின் முகாமைத்துவத்திற்கு உதவி புரிதல்.
- கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பாடசாலைகள் மற்றும் நிறுவகங்களை நிறுவுதல் மற்றும் அவற்றுக்கு உதவி வழங்குதல்.
- கல்வி நடவடிக்கைகளில் மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபர்களின் திறன்களை வளர்த்தல் மற்றம் விருத்தி செய்வதற்கு உதவி வழங்குதல்.( தற்போது பிரதானமாக உயர் கல்விக்கு புலமைப்பரிசில்களை வழங்குதல் அடிப்படை மற்றும் முக்கிய அலுவலொன்றாக கவனத்திற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.)



**மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளரின் அறிக்கை**

மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளராக 2015 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டதுடன் மஹபொல புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொண்ட ஒருவர் மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். 1984 - 1985 கல்வியாண்டில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வணிக நிர்வாகத்துறையில் சிறப்பு பட்டத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார். அதன் பின்னர் 04 வருட காலம் கணக்கியல் துறையில் பயிற்சியைப் பெற்று 1996 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனமொன்றில் கணக்காளராக தனது தொழிலை ஆரம்பித்துள்ளார். அந்த நிறுவனம் முழுமையான வெளிநாட்டு முதலீட்டைக் கொண்ட நிறுவனமாக இருந்ததுடன் 03 கைத்தொழிற்சாலைகளை ஆரம்பித்து இலங்கையின் ஏற்றுமதித் துறையில் முன்னணி நிறுவனமாகப் பரிணமித்தது. அந்த நிறுவனத்தில் பல்வேறு பதவிகளை வகித்து இறுதியாக அதன் பணிப்பாளர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் 2012 ஆம் அண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்காளராக இணைந்து கொண்டதுடன், அதில் 05 வருட சேவைக் காலத்தை நிறைவு செய்ததுடன் அதனூடாக பல்கலைக்கழக முறைமை மற்றும் அதன் செயற்பாடு தொடர்பான சிறப்பான தெளிவைப் பெற்றுக்கொண்டார். அங்கு விசேடமாக மஹபொல மற்றும் மாணவர் உதவு தொகையை செலுத்தல் சம்பந்தமான அலுவலகள் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் மஹபொல சம்பந்தமாக விசேட அனுபவம் மற்றும் தேர்ச்சியைப் பெற்றுக்கொண்டார். அந்த பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவம் மற்றும் தேர்ச்சியின் அடிப்படையில் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளராக அலுவல் மேற்கொள்வதற்கு அன்றைய நம்பிக்கை பொறுப்பாளர் சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மஹபொல உயர் கல்வி நம்பிக்கை நிதியம் நாட்டின் உயர் கல்வியைப் பயிலும் மாணவர்களின் சொத்தாக இருப்பதுடன், அதன் ஸ்தாபகர் மறைந்த லலித் அத்துலத்முதலி அவர்களை இச்சந்தர்ப்பத்தில் மிகவும் நன்றியுணர்வுடன் நினைவுகூருவதுடன் அந்த உத்தமர் தூர நோக்குடன் மற்றும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மீது இளைஞர்களின் பங்களிப்பை மிகவும் பெறுமதி வாய்ந்த வளமொன்றாக உணர்ந்து குறைந்த வசதிகளைக் கொண்ட இளைஞர்களின் உயர் கல்விக்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்வதற்குத் தேவையான நிதியுதவியை வழங்கும் நோக்குடன் தனது சொந்தப் பணத்தை அன்பளிப்புச் செய்து ஆரம்பிக்கப்பட்ட மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு 2018 ஆம் ஆண்டாகும்போது 39 வருடங்கள் சென்றுள்ளதுடன், 15 பில்லியன் ரூபாவுக்கும் அதிகளவு செலவை மேற்கொண்டு 3 இலட்சத்திற்கும் அதிகளவு மாணவர்களுக்கு மஹபொல புலமைப் பரிசிலை வழங்கியுள்ளதுடன் தற்போது நிதியமானது 10 பில்லியன் ரூபாவுக்கும் அதிகளவு சொத்துக்களைக் கொண்ட பலம்மிக்க நிறுவனமாக திகழ்கின்றது.

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் 1999 ஆம் ஆண்டில் மஹபொல புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டதுடன், இலங்கைக்குத் தேவையான தகவல் தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் விஞ்ஞானிகளை உருவாக்கும் பிரதான நிறுவகமொன்றாகத் திகழ்கின்றது. தற்போது அந்த நிறுவகத்தின் பெறுமதி 10 பில்லியனிலும் அதிகமாக இருப்பதுடன், இந்த நிறுவகம் தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றாக்குவதற்குத் தேவையான வரைவுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதற்கமைய, 21 ஆம் நூற்றாண்டின் கல்வியை மையமாகக்கொண்ட பொருளாதார முறையொன்றினை நோக்கிப் பயணிக்கும்போது மனித வளங்களை பயிற்றுவிப்பதற்கு இது மிகவும் பாரிய துணையாக இருக்கும். வருடாந்தம் சுமார் 10,000 மாணவர்களை பல்வேறு பாடநெறிகளுக்காக ஆட்சேர்த்துக் கொள்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் இந்த நிறுவனத்திடம் காணப்படுகின்றது.

மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக முதனிலை மற்றும் இரண்டாம் நிலை கல்வியை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு நாட்டின் பாடசாலை முறைமையை மேம்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் கஷ்டப் பிரதேச கிராமியப் பாடசாலைகளை மேம்படுத்துவதற்காக மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் கடந்த தசாப்த காலத்திற்குள் மிகவும் பாரிய பணியொன்றை நிறைவேற்றியுள்ளதாக மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதற்கமைய பாடசாலைக்கான கேட்போர்கூடங்கள், விளையாட்டரங்கு மற்றும் நீச்சல் தடாகங்கள், அதிக எண்ணிக்கையான பாடசாலைக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் ஊடாக நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்தின் கீழ் பாடசாலை முறைமையை மேம்படுத்துவதனூடாக குறைந்த வசதிகளைக் கொண்ட கிராமப்புறப் பாடசாலை மாணவர்களுக்கு உயர் கல்விக்கான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு அது பாரிய துணையாக இருந்தது.

கடந்த ஒரு தசாப்த காலத்திற்குள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு சமாந்திரமாக மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நிதியமும் புலமைப் பரிசில்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதற்கமைய 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக்கொள்ளப்பட்ட மாணவர்களிடையே 50% இற்கும் அதிக சதவீதமானோருக்கு புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு முடியுமாகியது. அதற்குத் தேவையான நிதியை ஏற்பாடு செய்துகொள்வதற்கும் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நிதியத்தினால் முடியுமாகியமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இங்கு புலமைப் பரிசில்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் சம்பந்தமாக 2018 ஆம் ஆண்டில் சில விசேட கொள்கை ரீதியிலான தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், இங்கு கவனத்திற்கொள்ளப்படும் குடும்ப வருமானத்தை 3 இலட்சம் ரூபாவிலிருந்து 5 இலட்சம் ரூபா வரை அதிகரித்ததுடன், அதனூடாக அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் முப்படைகளில் பணியாற்றுபவர்களில் கணிசமான எண்ணிக்கையானோரின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்ள முடியுமாகியது. அதனூடாக மேலதிகமாக சுமார் 3000 மாணவர்களுக்கு வருடாந்தம் வழங்கப்படும் புலமைப் பரிசில்களை அதிகரிப்பதற்கான வாய்ப்புக் கிடைத்தது. இதற்காக மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு சுமார் 500 மில்லியன் ரூபா மேலதிகமான வருடாந்த செலவை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு சுமார் 30,000 மாணவர்கள் அனுமதித்துக்கொள்ளப்பட்டதுடன், அவர்களில் சுமார் 15,000 மாணவர்களுக்கு புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொடுக்க முடியுமாகியது. இதனை எதிர்வரும் 5 வருடங்களுக்குள் 25,000 மாணவர்கள் வரை அதிகரிப்பதற்கு அதிகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், அதற்குத் தேவையான நிதியை ஏற்பாடு செய்துகொள்வதற்கான திட்டம் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் எதிர்வரும் 05 வருடங்களுக்கான மூலோபாயத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு தசாப்த காலப் பகுதிக்குள் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் பல்வேறு பிரச்சினைகளுக்கு மற்றும் பலவீனமான முகாமைத்துவம் காரணமாக பாரிய பின்னடைவுக்குட்பட்டதுடன் ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் காரணமாக நிதியத்தின் விருத்தி மிகப் பாரிய வகையில் வீழ்ச்சியடைந்தது. 2015 ஆம் ஆண்டில் எனது நியமனத்துடன் அந்த அனைத்து ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் சம்பந்தமாக மிகவும் கவனமாக விசாரணைகளை மேற்கொண்டு அவற்றைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் எடுக்க முடியுமாகியதுடன் அதற்காக பாரிய அர்ப்பணிப்பை மேற்கொண்டதுடன், அதனூடாக மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு பல்வேறு நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்தது.

மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த நெட்வெல்த் கோப்பரேஷன் மற்றும் நெட்வெல்த் சிகியுரீட்டி ஆகிய 02 கம்பனிகளினதும் பலவீனமான முகாமைத்துவத்தின் காரணமாக கடந்த 05 வருட காலத்தினுள் நிதியம் பாரிய நட்டத்தை அடைந்துள்ளதுடன் அந்த நிறுவனங்களின் அலுவல்கள் மற்றும் முகாமைத்துவத்தை மறுசீரமைப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதுடன் அது தொடர்பான அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தலைமை நிதியத்தை முகாமைப்படுத்தும் அலுவல் அந்தக் கம்பனிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், அந்த அலுவலிலிருந்து நீக்கி 2018 ஆம் ஆண்டில் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் கீழ் கொண்டுவந்தமையின் காரணமாக 2019 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டினுள் நிதியத்தின் வருமான வளர்ச்சி வேகத்தை 35% அதிகரிக்க முடியுமாகியது. மேலும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் மற்றும் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கிடையில் நிதியத்திற்குரிய சொத்தக்களை நீக்குதல் சம்பந்தமாக மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு தீமை பயக்கும் வகையிலான 02 ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதனை சீர்படுத்துவதற்கு மற்றும் நிதியத்திற்குச் சொந்தமான சொத்துக்களைப் பாதுகாத்தல் தொடர்பான பொறுப்புமிக்க அலுவலொன்றை 2018 ஆம் ஆண்டினுள் நிறைவேற்ற முடியுமாகியது. அதற்கமைய மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு தீமை பயக்கும் வகையிலான ஒப்பந்தங்களை இரத்துச் செய்வதற்கு மற்றும் சொத்துக்களை மீண்டும் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்திற்குப் பெற்றுக்கொள்வதுடன் தொடர்பான கோரிக்கைகளை ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுக்களிடம் முன்வைத்து அந்த ஒப்பந்தங்களை இரத்துச் செய்வதற்குத் தேவையான பின்னணி தயார் செய்யப்பட்டுள்ளது.

மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியச் சட்டம் 1981 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் அங்கீகரித்துக்கொள்ளப்பட்டு தற்போது 39 வருடங்கள் கழிந்துள்ள போதிலும் நிதியத்தின் நிதிச் செயற்பாட்டை பாதுகாப்பதற்கு மற்றும் நிதியத்தை நிர்வகிப்பதற்காக நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் நம்பிக்கை பொறுப்பாளர்களால் மேற்கொள்ளப்படும் தவறுகள் மற்றும் முறையற்ற பயன்பாடுகள் காரணமாக நிதியத்திற்கு ஏற்படும் நட்டத்தைக் குறைத்துக்கொள்வதற்காக நம்பிக்கை நிதியத்தின் அனைத்து ஊழியர்கள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களை பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழான தவறுகள் தொடர்பான ஏற்பாடுகளுக்குள் உள்ளடக்குதல் தொடர்பான திருத்தங்கள் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியச் சட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டில் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது.

அதற்கமைய, எதிர்காலத்தில் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் மிகவும் பாதுகாப்பான வகையில் தொடர்ந்தும் காணப்படுவதுடன் எதிர்காலத்தில் நாட்டில் உயர் கல்வியைப் பயிலும் மாணவர்களுக்கு விரிவான வகையில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அது உறுதுணையாக இருக்கும்.

தற்போது விலை மட்டங்களின் அதிகரிப்பு மற்றும் உயர் கல்வியைப் பயிலும் மாணவர்களின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதற்காக பாரியளவு செலவொன்றை மேற்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளமையினால் உரிய காலத்தில் (நிச்சயிக்கப்பட்ட தினமொன்றில்) தவணைத் தொகையை பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் கீழ் முன்னர் நிலவிய செலுத்துகை முறைகளை முழுமையாக மறுசீரமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்காக திறைசேரியின் அங்கீகாரமும் கிடைத்தது. அதுவரை நிலவிய செலுத்துகை முறையின் கீழ் மாணவர்களுக்கு மாதாந்தம் புலமைப் பரிசில் தவணைத் தொகை பல்கலைக்கழகத்தின் ஊடாக செலுத்தப்பட்டதுடன், மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்புத் தொகை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டது. இந்த செலுத்துகை நடவடிக்கைக்கு அதிக காலம் எடுத்ததுடன் மாணவர்களுக்கு 02 அல்லது அதனிலும் அதிகளவு காலம் புலமைப் பரிசில் தவணைத் தொகையை செலுத்துவதற்குத் தாமதமாகியது. அதற்கமைய இந்த செலுத்துகை முறையை முழுமையாக மாற்றியமைத்து மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தினூடாக மாதாந்தம் புலமைப் பரிசில் மாதாந்த தவணைத் தொகையை குறிப்பிட்ட மாதத்தின் 15 ஆம் திகதியன்று மாணவர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வரவு வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், செலுத்துகையுடன் தொடர்பான பரிந்துரையை மாத்திரம் பல்கலைக்கழத்திடமிருந்து பெற்றக்கொள்ளப்பட்டது. அதற்கமைய அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவகங்களில் பயிலும் சுமார் 60,000 மாணவர்களுக்கு 2019 ஆண்டு முதல் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தினூடாக நேரடியாக செலுத்துகை அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த முறையை தற்போது சிறப்பான வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு முடியுமாகியமை மகிழ்ச்சிக்குரிய விடயமாக இருப்பதாகத் தெரிவிப்பதுடன் அதற்குத் தேவையான அங்கீகாரத்தை வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த காலங்களில் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் கூட்டங்கள், கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் முறையான வகையில் நடாத்தப்பட்டதுடன் 2015 முதல் இன்றுவரை 02 மாதங்களுக்கொருமுறை நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டில் 06 நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அதற்கமைய, அவற்றினூடாக எடுக்கப்பட்ட தீர்மானங்களை சிறப்பான வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு முடியுமாகியதுடன் அதனூடாக நிறுவனத்தின் நல்லாளுகையை பலப்படுத்துவதற்கான ஆற்றல் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

2018 ஆம் ஆண்டில் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் அலுவல்கள் மற்றும் கடமைகளை வினைத்திறன்மிக்கதாக்குதல் மற்றும் புலமைப் பரிசில் பெற்றுக்கொள்வோரின் தேவைகளை நிறைவு செய்வதனை இலகுபடுத்துவதனை நோக்காகக்கொண்டு செலுத்துகை முறைமை மற்றும் கணக்கு முறைமைகளை கணனிமயப்படுத்துவதற்கான அனைத்து அலுவல்களையும் தயார் செய்ததுடன், செலுத்துகை முறைமையின் சுமார் 90% இனை நிறைவு செய்வதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. அத்துடன் புதியதொரு கணனிமயப்படுத்தல் முறையொன்றை அறிமுகஞ் செய்ததுடன் அதனை அது 2019 ஆம் ஆண்டு முதல் மிகச் சிறப்பான வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியதிற்கான இணையத்தளமொன்றின் தேவை மிக நீண்ட காலமாக நிலவியதுடன், 2018 ஆம் ஆண்டில் அந்த மஹபொல இணையத்தளத்தை உருவாக்கி நிறைவு செய்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது. அதற்கமைய 2019 ஆம் அண்டு முடிவடைவதற்குள் அதனைத் துவங்குவதற்கு முடியுமென மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன்நிறுவன நல்லாளுகை மற்றும் மாணவர்களின் மற்றும் ஏனைய ஆர்வம் காட்டும் அனைவரதும் மஹபொல தொடர்பான தகவல் தேவையை நிறைவு செய்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

2020 - 2025 மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நிதியத்தின் மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதனூடாக உயர் கல்வியைப் பயிலும் மாணவர்களின் உயர் கல்விக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்கான பாரிய வேலைத் திட்டமொன்று முன்வைக்கப்பட்டுள்ளதுடன், தற்போது நிதியத்திடம் நிலவும் சொத்துக்களை இரு மடங்காக மாற்றுவதற்குத் தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தைப் பலப்படுத்துவதற்கு மற்றும் அதன் நல்லாளுகை மற்றும் செயற்பாட்டைப் பலப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளம்போது ஒத்துழைப்பு வழங்கிய, 2015 முதல் இதுவரை நியமிக்கப்பட்ட அனைத்து நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கும், அலுவலர்களுக்கும், அர்ப்பணிப்புடன் பணியாற்றும் பணியாட் தொகுதி அங்கத்தவர்களுக்கும், உயர் கல்வி அமைச்சின் மற்றும் ஏனைய நிறுவனங்களின் அனைத்து அலவலர்களுக்கும், மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் செலுத்துகை செயற்பாட்டை மறுசீரமைப்பதற்கு பங்களிப்பை வழங்கிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் உட்பட்ட பணியாட் தொகுதியனருக்கும், பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் மற்றும் அலுவலர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம், எதிர்வரும் 10 ஆண்டுகளுக்குள் இந்த நாட்டின் உயர் கல்வித் துறைக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்கும், பலப்படுத்தவதற்கும் தேவையான நிதிசார் பலத்தை வழங்குவதற்கு முடியமான மிகச் சிறந்த நிறுவனமொன்றாகப் பரிணமிக்க வேண்டுமென நான் மனமாரப் பிரார்த்திக்கின்றேன்.

**எம். பராக்கிரம ஏக்கநாயக்க பண்டார,**
**பணிப்பாளர்,**
**மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதிய**

# பொருளடக்கம்


**எங்களைப் பற்றி**

| | |
|---|---|
| அடிப்படை பெறுமதிகள் | 01 |
| வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தல் | 02 |
| மஹாபொலவின் வரலாறு | 03 |
| நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை (1981-2018) | 04-05 |

**நிர்வாகக் கலந்துரையாடல்**

| | |
|---|---|
| செயற்பாட்டு மீளாய்வு | 06-16 |
| நிறுவனத்தின் நல்லாளுகை | 17-19 |
| நிறுவனக் கட்டமைப்பு | 20-21 |

**நிதியியல் அறிக்கைகள்**

| | |
|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 22-30 |
| நிதிக்கூற்றுக்கள் | 31 |
| விரிவான வருமானக் கூற்று | 32 |
| பங்கு மாற்றங்கள் பற்றிய கூற்று | 33 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 34 |
| கணக்கீட்டுக் கொள்கைகள் | 35-39 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 40-57 |

# அடிப்படை பெறுமதிகள்

**நேர்மை**

எம்மால் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசிலுக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் உரிய செயல்வழி முறையின் கீழ் மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் நியாயமான முறையில் மேற்கொள்ளப்படுவதுடன் தகைமை பெற்ற மாணவர்களின் செலுத்துகைகளுக்கு நியாயமான காலப் பகுதிக்குள் அவர்களுக்கு வழுங்கவதற்கு நிதமும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

**நெகிழ்வுத் தன்மை**

நிதியத்தின் ஊழியர்கள் மற்றும் பணிப்பாளர் உட்பட்ட பணியாட்தொகுதியை பலப்படுத்துவதற்காக புதிய கருத்துக்களை கண்டறிந்து போட்டி அடிப்படையிலான நிதிச் சந்தையில் மிகச் சிறப்பான வகையில் நடவடிக்கை மேற்கொள்கின்றது.

**சாதகமான மனப்பாங்கு**

புலமைப்பரிசில்களை வழங்கும்போது மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளும்போது மற்றும் நிதியை ஏற்பாடு செய்துகொள்ளும்போது பாரிய பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படுவதுடன் அந்த அனைத்து சவால்களையும் மிகவும் சாதகமான வகையில் வெற்றிகொள்வதற்கான ஆர்வம் ஊழியர்களிடம் நிலவுகின்றது.

**குழு உணர்வு**

மஹபொல புலமைப்பரிசில் நிதியத்தின் ஊழியர்கள் திறந்த மனப்பாங்கு, ஒவ்வொருவர் மீதும் காட்டும் நேச உணர்வு மற்றும் தனிநபர் அபிவிருத்தி ஊடாக நிறுவனத்தின் இலக்கை அடைந்துகொள்வதற்காக ஒன்றிணைந்து நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

**விளைதிறன்மிக்கது**

தனது அலுவல்கள் சம்பந்தமாக மஹபொல உயர்கல்வி நம்பிக்கை நிதியத்தின் ஊழியர்களிடையே சிறப்பான புரிந்துணர்வு மற்றும் நம்பிக்கை நிலவுவதுடன் அவர்கள் நிறுவனத்தின் இலக்கை அடைந்துகொள்வதற்காக வினைத்திறனுடன் நிதமும் முயற்சி மேற்கொள்கின்றனர். மிகவும் குறைந்தளவிலான ஊழியர்கள் ஊடாக (10 ஊழியர்கள்) மாதாந்தம் சுமார் 70,000 புலமைப்பரிசில்களை வழங்கும் அலுவலை மேற்கொள்கின்றனர்

**சிறப்புத் தேர்ச்சி மீதான சார்புப் போக்கு**

மஹபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் ஊழியர்கள் தொடர்ச்சியாக சேவை நிலைமைகளை உச்சளவு மட்டத்திற்கு கொண்டுவருவதற்காக உச்சளவு அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொள்கின்றர்.

# மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தல்

மறைந்த கௌரவ லலித் அத்துலத்முதலி அவர்கள் 1980 ஆம் ஆண்டில் கௌரவ வர்த்தக மற்றும் கப்பற்துறை அமைச்சராக பதவி வகிக்கும் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட "மஹபொல" எனும் எண்ணக்கருவின் கீழ் முதன்முதலாக வர்த்தக கண்காட்சியின் ஊடாக கிராமிய மக்களுக்கு திறந்த பொருளாதாரத்தின் நன்மைகள் மற்றும் அறிவைப் பெற்றுக்கொடுக்கும் அடிப்படை நோக்கத்தில் அன்றைய வர்த்தக மற்றும் கப்பற்துறை அமைச்சு "மஹபொல" அபிவிருத்தி செய்யப்பட்டது. பாடசாலைகளினுள் நடாத்தப்பட்ட வர்த்தக விற்பனை நிலையங்கள் மற்றும் கல்விக் கண்காட்சிகளின் நுழைவுச் சீட்டுக்கள் மற்றும் விற்பனைக் கூடங்கள் மற்றும் மஹபொல உயர் கல்வி கல்வி லொத்தர் மூலமான வருமானம் மற்றும் அன்பளிப்புக்கள் அந்தப் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மற்றும் மஹபொல புலமைப் பரிசிலை வழங்குவதற்கு ஆரம்பத்தில் பயன்படுத்திக்கொள்ளப்பட்டது. வர்த்தகப் பொருளாதாரத்தின் அடிப்படை மாற்றம் நகர்ப்புற மக்களுக்குப் போன்று துரிதமாக கிராமப்புற மக்களுக்கு கிடைக்கவில்லை. புதிய வர்த்தக முறை ஊடாக நகர்ப்புற மக்கள் அனுபவித்த அநேகமான சலுகைகள் கிராமப்புற மக்களுக்கு கிடைக்கவில்லை. இந்த கிராமப்புற, நகர்ப்புற இடைவெளியை இல்லாதொழித்து கிராமப்புற மக்களுக்கு அறிவு மற்றும் அனுபவத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் அன்றைய கௌரவ வர்த்தக மற்றும் கப்பற்துறை அமைச்சர் லலித் அத்துலத்முதலி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட திட்டமான "மஹபொல" இன்று பொது மக்களின் சொத்தாகும். உயர் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான திறமையைக் கொண்டுள்ள ஆனாலும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள நாட்டு மக்களின் உன்னத சொத்தான இது எதிர்கால சந்ததியின் முன்னேற்றத்திற்கான உந்து சக்தியாகும்.

1981 நவம்பர் 14 ஆம் திகதி முதலாவது புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் 422 புலமைப் பரிசில்கள் வழங்குமுகமாக பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்ட மண்டபத்தில் நடைபெற்றது. ஆரம்பம் முதல் 2018 ஆம் ஆண்டு வரை 300,000 இற்கும் அதிகமான புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்காக சுமார் 15 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. தற்போது இந்த அலுவலுக்காக வருடாந்தம் 1600 மில்லியன் ரூபா தொகை தவணைப் பணத்தைச் செலுத்துவதற்காக தேவைப்படுகின்றது.

பல்கலைக்கழகங்களுக்கு பிரவேசிக்க முடியாதுபோன மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பக் கல்வியை வழங்குவதற்காக 1999 ஆம் ஆண்டில் கடுவலை மாலபே இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (SLIIT) தகவல் தொழில்நுட்பக் கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்காக மஹபொல நிதியத்திலிருந்து 373 மில்லியன் ரூபாவும், 25 ஏக்கர் காணியும் வழங்கப்பட்டுள்ளது. அந்த நிறுவகம் தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா மற்றும் பட்டப் பாடநெறிகளை நடாத்துகின்றது.தற்போது வருடாந்தம் சுமார் 10,000 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

மஹபொல உயர் கல்வி நம்பிக்கை நிதியத்தின் நிதி முதலீட்டு நடவடிக்கைகள் தொடர்பாக நெஷனல் வெல்த் கோப்பரேஷன் கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனியான நெஷனல் வெல்த் சிக்கியுரிட்டி கம்பனி 2003 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பத்தில் வழங்கப்பட்ட 3.16 பில்லியன் ரூபா தொகை 2018 ஆம் ஆண்டாகும்போது 8.5 பில்லியன் ரூபா வரை விருத்தியடைந்துள்ளது.

# மஹபொல வரலாற்றில் முக்கிய திருப்புமுனைகள்

- 1985 ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டப்பின் படிப்புக்காக புலமைப்பரிசில்களை வழங்குவதற்காக 53.8 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

- 1986 ஆம் ஆண்டில் கல்வி ஆலோசனை சேவைக்கு மற்றும் தேசிய ஆங்கில மொழிக் கல்விக்காக 1 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

- 2003 ஆம் ஆண்டில் மஹபொல கருத்திட்டப் பிரிவை ஆரம்பித்தல். மஹபொல மாணவர் காப்புறுதி மற்றும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர் காப்புறுதிக்காக 15.4 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

- 2004 ஆம் ஆண்டில் மஹபொல உயர் கல்வி நம்பிக்கை நிதியத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பாடசாலை அபிவிருத்தி நிதியத்தின் வட்டி வருமானத்தின் ஊடாக 11 பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக (பாடசாலைக் கட்டிடங்கள், நீச்சல் தடாகங்கள், விளையாட்டு மைதானங்கள், கேட்போர்கூடங்கள் என்பவற்றை நிர்மாணிப்பதற்கு) 202 மில்லியன் ரூபா நிதியுதவியை வழங்குவதற்கு முடியுமாக இருந்ததுடன் ஹோமாகம பிட்டிபன மஹிந்த ராஜபக்ஷதேசிய பாடசாலையை அமைப்பதற்கு 30 மில்லியன் ரூபா ஆரம்ப செலவு மேற்கொள்ளப்பட்டது.

- 2005 ஆம் ஆண்டில் சுனாமியின்போது இறந்த மஹபொல புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்பவர்களின் குடும்பங்களுக்கு 1.5 மில்லியன் ரூபா உதவித் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது.

- 2015 ஆம் ஆண்டில் மஹபொல புலமைப் பரிசில் தவணைத் தொகையை ரூ.2,500/= இலிருந்து ரூ. 5,000/= வரை அதிகரித்தமை.

- 2018 ஆம் ஆண்டில் மஹபொல புலமைப் பரிசிலுக்கு தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கான வருமான எல்லையை ரூ. 300,000/= இலிருந்து ரூ. 500,000/= வரை அதிகரித்தல். அதனூடாக சுமார் 3000 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## 1981 முதல் 2018 வரை மஹாபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நிதியத்திற்குப் பொறுப்பான அமைச்சு மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்

| விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு | | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் | காலம் (ஆண்டு) |
|---|---|---|---|
| 1 | வர்த்தகம் மற்றும் கப்பற்துறை | கௌரவ லலித் அத்துலத்முதலி | 1981 - 1983 |
| 2 | வர்த்தகம் மற்றும் கப்பற்துறை | கௌரவ லலித் அத்துலத்முதலி (தேசிய பாதுகாப்பு அமைச்சர்) | 1984 - 1988 |
| 3 | வர்த்தகம் மற்றும் கப்பற்துறை | கௌரவ லலித் அத்துலத்முதலி (விவசாயம், உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர்) | 1989-1990 |
| 4 | வர்த்தகம் மற்றும் வணிக அமைச்சு | கௌரவ ஏ.ஆர்.மன்சூர் - நம்பிக்கை பொறுப்பாளர், கௌரவ லலித் அத்துலத்முதலி(விவசாயம், உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர்) | 1991 -1992 |
| 5 | வர்த்தகம் மற்றும் வாணிப அமைச்சு | கௌரவ ஏ.ஆர்.மன்சூர் - நம்பிக்கை பொறுப்பாளர், கௌரவ லலித் அத்துலத்முதலி(விவசாயம், உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர்) | 1993 |
| 6 | வர்த்தகம் மற்றும் வாணிப அமைச்சு | கௌரவ ஏ.ஆர்.மன்சூர் | 1994 |
| 7 | உள்ளக மற்றும் சர்வதேச வர்த்தக மற்றும் வாணிப அமைச்சு | கௌரவ கிங்ஸ்லி ரீ.விக்கிரமரத்ன | 1995 - 2000 |
| 8 | உள்ளக மற்றும் சர்வதேச வர்த்தக மற்றும் வாணிப, கப்பற்துறை அபிவிருத்தி மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு | கௌரவ ரவூப் ஹகீம் | 2001 |
| 9 | வாணிப மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சு | கௌரவ ரவி கருணாநாயக்க | 2002 - 2004 |
| 10 | வாணிப மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சு | கௌரவ ஜெயராஜ் பெர்னாந்து புள்ளே | 2004 மே - 2007 |
| 11 | வர்த்தக, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சு | கௌரவ பந்துல குணவர்தன | 2008 - 2009 |
| 12 | கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தக அமைச்சு | கௌரவ ஜொன்ஸ்டன் பெர்னாந்து | 2010 - 2012 |
| 13 | ஜனாதிபதி செயலகம் | சனாதிபதியின் செயலாளர் | 2013 - 2014 |
| 14 | உணவுப் பாதுகாப்பு அமைச்சு | கௌரவ காமினி ஜயவிக்ரம பெரேரா | 2015 |
| 15 | அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு | கௌரவ மலிக் சமரவிக்ரம | 2015 நவ. - 2018 |
| 16 | உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | கௌரவ கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ | 2018 ஜூலை |

# நம்பிக்கை பொறுப்பாளர் சபை - 2018

| | பொறுப்பாளர் / பொறுப்பாளர்கள் | பதவி | இருந்து | வரை |
|---|---|---|---|---|
| 01. | கௌரவ பிரியசாத் டெப் | பிரதம நீதியரசர் | 2017 - ஜுன் | 2018 - செப். |
| 02. | கௌரவ மலிக் சமரவிக்ரம | அபிவிருத்தி மூலோபாயங்கள், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் | 2015 - ஒக். | 2018 - மார்ச் |
| 03. | கலாநிதி கௌரவ விஜேதாச ராஜபக்ஷ | உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் | 2018 ஏப்ரல் | 2018 செப். |
| 04. | திருமதி சாந்தனீ விஜேவர்தன, | செயலாளர், அபிவிருத்தி மூலோபாயங்கள், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு. | 2015 - ஒக். | 2018 - மார்ச் |
| 05. | திரு. ஜே.ஜே.ரத்னசிரி | செயலாளர், உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 2018- ஏப்ரல் | 2018 - செப். |
| 06. | டீ.டீ.திசாநாயக்க | செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | 2016 - ஏப்ரல் | 2018 - மார்ச் |
| 07. | திரு.எஸ்.எஸ்.ஹெட்டிஆரச்சி | செயலாளர், கல்வி அமைச்சு | 2017 - நவ. | 2018 - செப். |
| 08. | எஸ்.வீ.டீ.கேசரலால் குணசேக்கர | நியமிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர் | 2018- ஜுலை | 2019 |
| 09. | கலாநிதி விக்கிரம வீரசூரிய | நியமிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர் | 2015 - மார்ச் | 2018 - மார்ச் |
| 10. | சட்டத்தரணி அனில் ராகருணா | நியமிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர் | 2015 - மார்ச் | 2018 - மார்ச் |
| 11. | மருத்துவர் திரு.டீ.கே.டீ.மெதிவ் | நியமிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர் | 2018 - மே | 2018 - செப். |

# செயற்பாட்டு மீளாய்வு

## 01. புலமைப் பரிசில் வழங்குதல்

மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிப்பவர்களிடையே வருடாந்தம் வழங்கப்படும் வரையறுக்கப்பட்ட மஹபொல புலமைப்பரிசில்கள் க.பொ.த (உயர் தரம்) பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய வழங்கப்படுகின்றது. இங்கு அதிகப் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு திறமையை அடிப்படையாகக்கொண்டு மஹபொல திறமை புலமைப் பரிசிலும் அதிலிருந்து திறமைக்கு முன்னுரிமை வழங்கி குடும்ப வருமானத்தைக் கவனத்திற்கொண்டு மஹபொல சாதாரண புலமைப் பரிசிலும் வழங்கப்படுகின்றது. வருடாந்தம் ஒதுக்கப்படும் புலமைப்பரிசில் மொத்த மஹபொல புலமைப் பரிசில்களின் எண்ணிக்கையில் 10% திறமை புலமைப்பரிசிலாக இருப்பதுடன் 90% சாதாரண புலமைப் பரிசிலுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சாதாரண புலமைப் பரிசிலைப் பார்க்கிலும் ரூ. 50/- திறமை புலமைப் பரிசிலுக்காகச் செலுத்தப்படும்.

இந்த ஆண்டில் 2017/18 கல்வியாண்டிற்காக 2017 க.பொ.த (உயர் தரம்) பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாக பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு 14,986 புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு மஹபொல புலமைப்பரிசில் நம்பிக்கை பொறுப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்த எண்ணிக்கையில் சுமார் 1498 மாணவர்களுக்கு திறமை அடிப்படையிலான புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் மீதி 13,490 மாணவர்களுக்கு திறமை அடிப்படையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்படும். பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக்கொள்ளப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கையான 28,000 உடன் ஒப்பிடும்போது மாணவர்களில் 53% சதவீதமானவர்கள் இந்த மஹபொல புலமைப்பரிசிலுக்குள் உள்ளடக்கப்படுகின்றனர். இதற்கமைய, 2018 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பாடநெறிகளுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்பட்டது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை தவிர மேலதிகமாக கீழ் குறிப்பிடப்படும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களில் பட்டப் பாடநெறிகள் மற்றும் தொழிற் கல்வி டிப்ளோமா பாடநெறிகளுக்கு 2051 புலமைப் பரிசிசல்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மஹபொல புலமைப் பரிசில்களை வழங்குதல் 2014 – 2018

| | பல்கலைக்கழகம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|---|
| 1. | கொழும்பு | 1,387 | 1,246 | 1,182 | 1,521 | 1,761 |
| 2. | பேராதனை | 1,615 | 1,381 | 1,318 | 1,452 | 1,757 |
| 3. | களணி | 1,371 | 1,590 | 1,551 | 1,820 | 1,985 |
| 4. | ஸ்ரீ ஜயவர்தனபுர | 1,810 | 1,859 | 1,894 | 2,029 | 2,288 |
| 5. | மொரட்டுவை | 836 | 836 | 775 | 828 | 957 |
| 6. | யாழ்ப்பாணம் | 709 | 785 | 1,049 | 1,129 | 1,062 |
| 7. | யாழ்ப்பாணம் (ராமநாதன்) | 27 | 130 | 116 | 142 | 40 |
| 8. | றுஹுணு | 667 | 1,015 | 907 | 1,009 | 1,098 |
| 9. | யாழ்ப்பாணம் - வவுனியா வளாகம் | 48 | 104 | 124 | 109 | 90 |
| 10. | கிழக்கு | 285 | 340 | 583 | 633 | 402 |
| 11. | கம்பஹா விக்கிரமாரச்சி ஆயுர்வேத கல்வி நிறுவகம் | 34 | 31 | 8 | 7 | 16 |
| 12. | சுதேச மருத்துவ நிறுவகம் | 79 | 68 | 66 | 73 | 93 |
| 13. | கொழும்பு கணனிக் கற்கை நிறுவகம் | 90 | 69 | 83 | 94 | 131 |
| 14. | கொழும்பு - ஸ்ரீபாளி | 32 | 92 | 69 | 99 | 63 |
| 15. | கட்புலன் ஆற்றுகை கலை | 187 | 348 | 330 | 330 | 242 |
| 16. | தென் கிழக்கு | 500 | 801 | 908 | 905 | 651 |
| 17. | ரஜரட்ட | 561 | 609 | 673 | 814 | 779 |
| 18. | சப்ரகமுவ | 339 | 546 | 535 | 556 | 540 |
| 19. | வயம்ப | 360 | 358 | 509 | 574 | 683 |
| 20. | கிழக்கு - திருகோணமலை வளாகம் | 72 | 109 | 127 | 118 | 135 |
| 21. | ஊவா வெல்லஸ்ஸ | 101 | 167 | 229 | 251 | 175 |
| 22. | சுவாமி விபுலானந்த | 37 | 191 | 140 | 161 | 38 |
| | **மொத்தம்** | **11,147** | **12,675** | **13,176** | **14,654** | **14,986** |


## மஹபொல புலமைப்பரிசில் வழங்கல் (ஏனைய நிறுவகங்கள்)

| | நிறுவகம் | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இலங்கை சட்டக் கல்லூரி | 25 |
| 2. | தேசிய தொழில்நுட்ப நிறுவகம், மொரட்டுவை | 70 |
| 3. | பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் | 26 |
| 4. | புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகம் | 20 |
| 5. | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் (10 பட்டப் பாடநெறிகள், 14 டிப்ளோமா பாடநெறிகள்) | 10 |
| 6. | இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் (15 பிராந்திய நிறுவகங்கள்) | 1500 |
| 7. | இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்கு 40 புலமைப் பரிசில்கள் ஒதுக்கப்பட்டுள்ளது | 400 |
| | | **2051** |

## பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக்கொள்ளப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் புலமைப் பரிசில் பெற்றுக்கொள்பவர்களுக்கிடையிலான ஒப்பீடு


| ஆண்டு | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | 22,687 | 25,523 | 28,939 | 30,000 | 31,158 |
| வருமான வரையறைக்கமைய தகைமை பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை | 13,500 | 14,000 | 15,000 | 15,000 | 20,000 |
| மஹபொல புலமைப் பரிசில் பெறுபவர்களின் எண்ணிக்கை | 12,675 | 13,176 | 14,654 | 14,500 | 14,984 |
| வருமான வரையறைக்கமைய தகைமை பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையானது மொத்த மாணவர்களின் சதவீதமாக | 59% | 54% | 52% | 50% | 64% |
| மஹபொல புலமைப் பரிசிலைப் பெறுபவர்கள் மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் சதவீதமாக | 56% | 52% | 51% | 48% | 48% |
| வருமான வரையறைக்கமைய தகைமை பெற்றுக்கொண்ட மாணவர்களிடையே மஹபொல புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் | 94% | 94% | 97% | 96% | 75% |

மஹபொல புலமைப்பரிசில்களை வழங்குதல் 2014 - 2018




**02.** **புலமைப் பரிசில் செலுத்தல்**


மஹபொல புலமைப் பரிசில் பெற்றுக்கொள்ளும் ஒருவருக்கு ஒரு கல்வியாண்டொன்றுக்கு புலமைப் பரிசில் 10 தவணைகள் செலுத்தப்படுகின்றது. அதற்கமைய புலமைப் பரிசிலுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாக திறைசேரியினால் மாதாந்தம் வழங்கப்படும் ரூ.2,450/− உட்பட புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்ளும் அனைவருக்கும் முறையே திறமை புலமைப் பரிசிலுக்காக ரூ. 5,050/− வும் சாதாரண புலமைப் பரிசிலுக்காக ரூ. 5,000/- வும் பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படுகின்றது.



# செயற்பாட்டு மீளாய்வு ...


**புலமைப் பரிசில் செலுத்துவதனை துரிதப்படுத்துவதற்காக நேரடி செலுத்தல் முறையை அறிமுகஞ் செய்தல்**

பழைய செலுத்தல் முறை




பல்கலைக்கழகத்தினால் கையொப்பப் பட்டியலைப் பயன்படுத்தி மாணவர்களுக்கான செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு பாரிய தாமதம் ஏற்பட்டது. 03 அல்லது 04 மாதங்களின் பின்னரே தவணைப் பணம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.
இந்தத் தாமதத்தை தவிர்த்துக்கொள்வதற்காக தவணைப் பணத்தை மாணவர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வைப்புச் செய்யும் முறையொன்று பிரேரிக்கப்பட்டு திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் 2019 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

புதிய செலுத்தல் முறை




அதற்கமைய, தற்போது 22 பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவகங்களில் பயிலும் சுமார் 70000 மாணவர்களுக்கு நேரடி வங்கி செலுத்தல் முறையின் ஊடாக புலமைப் பரிசில் தவணைத் தொகை செலுத்தப்படுகின்றது. செலுத்துகை தொடர்பாக பல்கலைக்கழகம் நேரடியாக தலையிடாதிருப்பதுடன் மஹபொல நிதியத்தினால் மாதாந்த தவணைத் தொகையான ரூ. 5,000/- மற்றும் ரூ. 5,050/- தவணைத் தொகையை மாணவர்களின் வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்படுகின்றத. இந்த முறை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன் எந்தவிதமான தாமதங்களுமின்றி மாணவர்களுக்கு தவணைத் தொகை உரிய நேரத்தில் கிடைக்கின்றது.

# செயற்பாட்டு மீளாய்வு ...

## மஹபொல புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமைகள்

### மஹபொல புலமைப் பரிசில் வகைகளுக்கான தகைமைகள்

லலித் அத்துலத்முதலி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் திறமை புலமைப் பரிசில் மற்றும் சாதாரண புலமைப் பரிசில் எனும் இரண்டு பிரிவுகளின் கீழ் புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றது.

1. **திறமை புலமைப் பரிசில்**

   க.பொ.த உயர் தரப் பரீட்சையில் மாணவர்களின் செயற்திறனின் அடிப்படையில் திறமை பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கு இந்தப் பிரிவின் கீழ் புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. புலமைப் பரிசில்களில் 10% திறமை பிரிவின் கீழ் வழங்கப்படுகின்றது.

2. **சாதாரண புலமைப் பரிசில்**

   மஹபொல சாதாரண புலமைப் பரிசில்கள், மாணவர் பெற்றுக்கொள்ளும் மாவட்ட திறமை அடிப்படையிலும் குடும்ப வருமானத்தையும் கவனத்திற்கொண்டு வழங்கப்படுகின்றது. மஹபொல புலமைப் பரிசில்களின் மொத்த எண்ணிக்கையில் 90% உம் சாதாரண புலமைப் பரிசிலுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

### மஹபொல புலமைப் பரிசில் பெற்றுக்கொள்வதற்கான தகைமைகள்

கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் புலமைப் பரிசிலைப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவார்கள்.

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. மாணவன் / மாணவி பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழகமொன்றுடன் இணைந்த முழு நேரப் பாடநெறியொன்றில் உள்ளக மாணவராக பதிவு செய்திருத்தல் வேண்டும்.

III. பெற்றோரின் வருமானம்

   a) பெற்றோரின் வருட வருமானம் 2017/18 முதல் அமுலுக்கு வரும் வகையில் 500,000 /- அல்லது குறைவாக இருத்தல் வேண்டும்.

   b) மேலே குறிப்பிடப்பட்ட வருமான எல்லை 2017/18 கல்வியாண்டுக்காக பதிவு செய்துகொண்ட மாணவர்களுக்கு செல்லுபடியானதாக இருக்கும். ஆயினும் இந்த சுற்றறிக்கை வலுப்பெறும் திகதியன்று எந்தவிதமான நிதியுதவியையும் பெற்றுக்கொள்ளாத மாணவர்களுக்கு அவர்களது பெற்றோரின் வருமானம் திருத்தியமைக்கப்பட்ட வரையறைக்குட்பட்டதாக இருப்பின் மஹபொல புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெறுகின்றனர்.


IV. புலமைப் பரிசிலுக்காக மாணவர்களை தெரிவு செய்யும்போது மாணவரின் பெற்றோர் சட்ட ரீதியாக பிரிந்திருப்பார்களாயின் அதனை உறுதிப்படுத்துவதற்காக எழுத்து மூலமான சாட்சியங்கள் அல்லது பிரிந்திருத்தல் தொடர்பான சட்ட ரீதியான அலுவல் மேற்கொள்ளப்படாதிருப்பின் கிராம அலுவலர் மற்றும் குறிப்பிட்ட பிரதேசத்தின் பொலீஸ் அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் வருமான வரையறையை தீர்மானித்தல் தொடர்பாக கவனம் செலுத்தல் வேண்டும்.

V. மாணவர் பணியொன்றில் ஈடுபட்டிருந்தால் அந்த தொழில் மூலம் ஈட்டும் வருமானத்தை பெற்றோரின் வருமானத்துடன் சேர்த்தல் வேண்டும்.


   மாணவர் தொழிலொன்றில் ஈடுபட்டிருப்பின் மற்றும் திருமணமானவராயின் அந்த மாணவர் மற்றும் துணையை தனியான குடும்பமாக கருதப்படல் வேண்டுமென்பதுடன், மேலே (III) இல் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ஒழுங்குவிதிகளுக்கமைய தகைமை மதிப்பீட்டுக்குட்படுத்தப்படும்.

**2018.12.31 ஆம் திகதியன்று மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நிதியத்தின் நிதி நிலைமை**

முதலீட்டுப் பிரிவு




முதலீட்டு வருமானம் - 2018



### மஹபொல நம்பிக்கை நிதியத்தின் ஏனைய முதலீடுகள்

### அபிவிருத்தி லொத்தர் சபை (Development Lotteries Board)

மஹபொல நம்பிக்கை நிதியத்தின் 2.2 மில்லியன் ரூபா அபிவிருத்தி லொத்தர் சபையில் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் அந்த சபைக்கு மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் உள்ளடக்கப்படுகின்றனர்.

அபிவிருத்தி லொத்தர் சபையினால் ஈட்டப்படும் வருமானம் நேரடியாக ஜனாதிபதி நிதியத்திற்கு மாற்றப்படுகின்றது. அதன் பின்னர் இலாபப் பங்கு ஜனாதிபதி நிதியத்தினால் மஹபொல உயர்கல்வி நம்பிக்கை நிதியத்திற்கு மாற்றப்படுகின்றது.

**ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நிதியத்திற்கு இலாபப் பரிமாற்றலின்போதான அபிவிருத்தி லொத்தர் சபையின் இலாபப் பங்கு 2014 - 2018**

| ஆண்டு | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| | ரூ.(மில்.) | ரூ.(மில்.) | ரூ.(மில்.) | ரூ.(மில்.) | ரூ.(மில்.) |
| அபிவிருத்தி லொத்தர் சபையின் தேறிய இலாபம் | 2016 | 1678 | 1836 | 507 | 2187 |
| மஹபொல நம்பிக்கை நிதியத்திற்கு மாற்றிய பங்கு | 898 | 736 | 767 | 25* | 804 |

* 2017 இல் அபிவிருத்தி லொத்தர் சபையினால் செலுத்த வேண்டிய குத்தகைப் பொறுப்புக்களுக்காக 1.7 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது. அதனால் அபிவிருத்தி லொத்தர் சபையின் தேறிய இலாபம் அந்த அளவினால் குறைவடைந்தது. எனவே, மஹபொல நம்பிக்கை நிதியத்திற்கு 25 மில்லியன் ரூபா மாத்திரமே மாற்றப்பட்டுள்ளது.

### நெட்வெல்த் கோப்பரேஷன் லிமிடட் (NWCL)

மஹபொல நம்பிக்கை நிதியத்தின் முழு உரிமையின் கீழ் நிலவும் நெட்வெல்த் கோப்பரேஷன் லிமிடட் (NWCL) இல் 200 மில்லியன் ரூபா முதலீடு செய்து வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக 2003 மார்ச் 23 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டது. நெட்வெல்த் கோப்பரேஷன் லிமிடட் முதலீட்டு முகாமையாளராக நடவடிக்கை மேற்கொள்வதுடன் மஹபொல நம்பிக்கை நிதியத்தின் முதலீட்டுப் பிரிவு குறைந்த ஆபத்தின் கீழ் உச்சளவு அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே முகாமைத்துவப்படுத்துகின்றது. அமைச்சரவை அங்கீகாரத்திற்கமைய 2018 ஆம் ஆண்டில் நெட்வெல்த்த கோப்பரேஷன் கம்பனியினால் நிர்வகிக்கப்பட்ட நிதியம் இலங்கை வங்கியின் நிறுவனக் கிளையில் காணப்படும்மஹபொல பிரதான கணக்கிற்கு மாற்றப்பட்டதுடன் 2019 பெப்ரவரி 28 ஆம் திகதி முதல் நெட்வெல்த் கோப்பரேஷன் லிமிடட் உடனான நிதிய முகாமைத்துவ ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டது.

### நெஷனல் வெல்த் சிகியுரிட்டீஸ் கம்பனி (NWSL)

நெஷனல் வெல்த் சிகியுரிட்டீஸ் லிமிடட் கம்பனி 2003 ஜுன் 23 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக கூட்டிணைக்கப்பட்டது. இந்தக் கம்பனி பத்திரங்கள் மற்றும் பங்கு பரிவர்த்தணை ஆணைக்குழு கட்டளைச் சட்டத்தின் கீழ் போன்றே தேசிய திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தல்களுக்கமைய முதனிலை கொள்வனவாளராக நடவடிக்கை மேற்கொள்வதற்காகபதிவு செய்யப்பட்டுள்ளது.

நெஷனல் வெல்த் கோப்பரேஷன் கம்பனி 2004 இல் தனது நிதியை முதலீடு செய்து நெஷனல் வெல்த் சிகியுரிட்டீஸ் லிமிடட் கம்பனியை ஆரம்பித்ததுடன் அந்தக் கம்பனியின் பங்கு மூலதனத்திற்கான மொத்த முதலீடு 300 மில்லியன் ரூபாவாக இருப்பதுடன் அது 2018 நிறைவடையும்போது 1 பில்லியன் ரூபா வரை அதிகரித்தது.

### 2013 முதல் 2018 வரை நெட்வெல்த் கோப்பரேஷன் கம்பனி மற்றும் நெஷனல் வெல்த் சிகியுரிட்டீஸ் கம்பனியின் செயற்பாட்டு விளைவு

| ஆண்டு | இலாபம்/நட்டம் | | மொத்தம் ரூ. (மில்.) |
|---|---|---|---|
| | நெஷனல் வெல்த் கோப்பரேஷன் ரூ. (மில்.) | நெஷனல் வெல்த் சிகியுரிட்டீஸ் ரூ. (மில்.) | |
| 2013 | (1.4) | 127.5 | 126.1 |
| 2014 | 60.9 | 516.6 | 577.5 |
| 2015 | 112.2 | (200.2) | (88.0) |
| 2016 | (65.8) | (499.2) | (564.9) |
| 2017 | 5.7 | 163.4 | 169.0 |
| 2018 | 8.9 | (242.5) | (233.5) |
| தேறிய பெறுபேறு | **120.5** | **(134.4)** | (13.8) |

2018 ஆகஸ்ட் 23 ஆம் திகதி அன்றைய விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ உயர் கல்வி மற்றும் கலசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கமைய NWCL கம்பனியுடன் நடைபெற்ற முதலீட்டு முகாமைத்துவ ஒப்பந்தத்தை தடை செய்வதற்கும் முகாமைத்துவ நிதியை இலங்கை வங்கியின் மஹபொல கணக்கிற்கு மாற்றுவதற்கும் NWSL கம்பனி பொருத்தமான கொள்வனவாளர் ஒருவரைத் தெரிவு செய்து அந்தக் கம்பனியின் பங்குகளை விற்பனை செய்வதற்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது. அதற்கமைய NWSLஇன் பங்குகளை விற்பனை செய்தலுடன் தொடர்புடைய பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (SLIIT)

கொழும்பு மாவட்டத்தில் மாலபே எனுமிடத்தில் அமைந்துள்ள 25 ஏக்கர் காணியில் SLIIT எனும் கல்லூரியொன்றை ஆரம்பிப்பதற்காக மஹபொல நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களால் அனுமதி வழங்கப்பட்டது. அதில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான முதுமாணிப் பட்டங்கள், டிப்ளோமா பாடநெறிகள் மற்றும் வேறு பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன. ஆரம்ப கட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் பாடநெறிகள் முன்மொழியப்பட்டன.

- தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணிப் பாடநெறி
- தகவல் தொழில்நுட்பம் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
- தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணிப் பட்டம் - பரிமாற்றல் விருப்பத்துடனான
- தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான டிப்ளோமா
- தகவல் தொழில்நுட்பம் சந்தைப்படுத்தலுடன் தொடர்பான டிப்ளோமா
- குறுகிய கால சான்றிதழ் பாடநெறிகள்

அதற்கமைய, தகவல் தொழில்நுட்ப நிறுவகத்திற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கட்டிடங்களை. நிர்மாணிப்பதற்காக 1999 இல் 500 மில்லியன் ரூபாவை முதலீடு செய்வதற்கு மஹபொல நம்பிக்கை நிதியத்தின் பொறுப்பாளர்கள் தீர்மானித்துள்ளனர். தகவல் தொழில்நுட்ப நிறுவகம் உத்தரவாதம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக அமைக்கப்பட்டது. பின்னர் 1982 இன் 17 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகமாக நிறுவப்பட்டது.

### கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்தல்

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் 2000 ஜனவரி கொள்ளுப்பிட்டியில் BOC மர்ச்சன்ட் டவர் கட்டிடத்தில் 400 மாணவர்களுடன் தகவல் தொழில்நுட்ப நிறுவகம் தாபிக்கப்பட்டது.

தற்போது அதில் 7000 இற்கும் அதிகமான பட்டத் தேர்வுநாடிகள் மற்றும் பட்டப்பின் படிப்பு தேர்வுநாடிகள் பாடநெறிகளை பயிலுவதுடன் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மாணவர்களும் கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். 9000 இற்கும் அதிகமான மாணவர்கள் வர்த்தகம், கணனி மற்றும் பொறியியல் பட்டங்களைப் பெற்றுள்ளனர்.

மேலும், SLIIT இல் முன்னணி பல்தேசியக் கம்பனிகள் மற்றும் இலங்கையின் நிறுவனங்கள் தொழில்நுட்பம் சார்ந்த வதிவிடப் பயிற்சிகளுக்காக மாணவர்களை ஈடுபடுத்துகின்றன. இங்கு அவர்களது தொழில்சார் சிறப்புத் தேர்ச்சியை விருத்தி செய்தல் மற்றும் அவர்கள் பெற்றுக்கொள்ளும் அறிவை நடைமுறையில் பிரயோகிப்பதற்கான வாய்ப்பை பெற்றுக்கொள்கின்றனர்.

2015 ஆம் ஆண்டில் SLIIT நிறுவகம் மற்றும் மஹபொல நிதியத்திற்கிடையில் குத்தகை ஒப்பந்தமொன்று மற்றும் சொத்துக்கள் ஒப்படைப்பு ஒப்பந்தமொன்று ஏறபடுத்திக் கொள்ளப்பட்டுள்ளதுடன் வருடாந்தம் 20 பில்லியன் ரூபா வாடகையாக SLIIT இனால் மஹபொலவுக்கு செலுத்துகின்றது. இந்த ஒப்பந்தத்திற்கு மஹபொல நம்பிக்கை நிதியத்தின் உரிய அங்கீகாரம் பெறப்படவில்லையென குறிப்பிடப்படுவதுடன் அது சம்பந்தமாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு மற்றும் விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் விசாரணை நடைபெறுவதுடன் அந்த விசாரணைகள் 2018 டிசம்பர் மாதமாகும்போதும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2019 முதலாம் 06மாதங்களுக்குள் உட்படும் முகாமைத்துவக் கணக்குகள்**
**2019 ஜுன் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக விபரமான வருமானக் கூற்று**

| வருமானம் | குறிப்புக்கள் | 30.06.2019 ரூ. | 30.06.2018 ரூ. | வளர்ச்சி |
|---|---|---|---|---|
| வட்டி வருமானம் - திறைசேரி பிணைப் பத்திரம் | 1 | 358,345,357 | 296,552,771 | 21% |
| வட்டி வருமானம் - திறைசேரி உண்டியல் | 2 | 18,134,052 | 7,157,882 | |
| வட்டி வருமானம் - சொத்து துணையுடனான பாதுகாப்பு | 3 | 17,248,300 | 20,800,755 | |
| வட்டி வருமானம் - நிலையான வைப்புக்கள் | 4 | 119,987,950 | 32,348,746 | |
| வட்டி வருமானம் - கடன் பத்திரங்கள் | 5 | 78,179,374 | 80,336,568 | |
| வட்டி வருமானம் - வணிகப் பத்திரங்கள் | | - | 15,855,705 | |
| வட்டி வருமானம் - குறுகிய கால வைப்பு / குறுகிய கால வைப்புக்களை மீளத் திருப்புதல் | 6 | 27,714,313 | 18,944,020 | |
| மூலதன இலாபத்தை அடைந்துகொள்ளல் | | 1,973,079 | | |
| **மொத்த முதலீட்டு வருமானம்** | | **621,582,425** | **471,996,447** | **32%** |
| நேரடிச் செலவுகள் | | | | |
| முகாமைத்துவத் நிதி - NWCL | | - | (14,805,079) | |
| பொறுப்பாளர் கட்டணம்-இலங்கை வங்கி (NWCL) | | - | (1,056,122) | |
| பொறுப்பாளர் கட்டணம்-இலங்கை வங்கி ( MTF) | | (932,000) | - | |
| நிதிசார் செலவுகள் - திறைசேரி பிணைப் பத்திர கட்டுப்பணம் | | (970,768) | (3,732,110) | |
| இலங்கை வங்கி கடனுக்கான வட்டிச் செலவு | | (35,331,626) | - | |
| **தேறிய முதலீட்டு வருமானம்** | | **584,348,031** | **452,403,136** | **29%** |
| **ஏனைய வருமானங்கள்** | | | | |
| DLB இலாபப் பங்குகள் | | 500,782,697 | 293,735,280 | |
| SLIIT வாடகை கூலி | | 10,000,000 | 10,000,000 | |
| ஏனைய வருமானங்கள் | | 50,425 | 1,876,730 | |
| **மொத்த ஏனைய வருமானங்கள்** | | **510,833,122** | **305,612,010** | |
| **மொத்த வருமானம்** | | **1,095,181,153** | **758,015,146** | |
| **செலவுகள்** | | | | |
| புலமைப் பரிசில் செலுத்தல் | | (344,445,136) | (662,783,395) | |
| வேதனம் | | (7,174,260) | (6,352,755) | |
| ஏனைய நிர்வாகம்சார் செலவுகள் | | (8,186,462) | (6,941,196) | |
| தேய்வு | | (28,829,022) | (28,019,523) | |
| மொத்தச் செலவு | | **(388,634,880)** | **(704,096,869)** | |
| செலவை விஞ்சிய தேறிய வருமானம் | | **706,546,273** | **53,918,277** | |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம் / நட்டம் | | 706,546,273 | 53,918,277 | |
| வருமான வரி நிதி ஏற்பாடு | | (98,916,478) | - | |
| | | **607,629,795** | **53,918,277** | |
| மொத்த வரிக்கு பின்னரான வருமானம் | | **607,629,795** | **53,918,277** | |

# நிறுவனத்தின் நல்லாளுகை

## நம்பிக்கையாளர் சபை

மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் உயர் அதிகாரம் நம்பிக்கை பொறுப்பாளர் சபையாக இருப்பதுடன், பொருத்தமான பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் நிதியத்தின் முகாமைத்துவம் தொடர்பான பொறுப்புக்களைக் கொண்டுள்ளது. தலைவராக கௌரவ உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் நடவடிக்கை மேற்கொள்வதுடன் உயர் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ஸ்தாபக நம்பிக்கை பொறுப்பாளரை பிரதிநிதித்துவப்படுத்தி நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் செயற்பாடுகளை வழிநடாத்துவார். நம்பிக்கை பொறுப்பாளர் சபையானது பதவிவழி அடிப்படையில் நியமிக்கப்படும் பொறுப்பாளர்கள் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்படும் அங்கத்தவர்களைக் கொண்டதாக இருப்பதுடன் அதன் அமைப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

1. கௌரவ உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் பதவிவழி அடிப்படையில் நிதியத்தின் தலைவராவார்.
2. உயர் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ஸ்தாபக நம்பிக்கை பொறுப்பாளரை பிரதிநிதித்துவப்படுத்தி நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் செயற்பாடுகளை வழிநடாத்துவார
3. உயர் கல்வி அமைச்சின் செயலாளர் பதவிவழி அடிப்படையில் ஒரு பொறுப்பாளர் ஆவார்.
4. கல்வி அமைச்சின் செயலாளர் பதவிவழி அடிப்படையில் ஒரு பொறுப்பாளர் ஆவார்.
5. வர்த்தக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் பதவிவழி அடிப்படையில் ஒரு பொறுப்பாளர் ஆவார்.
6. விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்படும் இரண்டு அங்கத்தவர்கள் நம்பிக்கை பொறுப்பாளர் சபையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.
7. அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் மேற்பார்வையாளரொருவர்.

## தலைவர் / நம்பிக்கை பொறுப்பாளர் சபை

1. நிறுவன நிர்வகிப்பு மற்றும் இருப்பை உறுதி செய்தல் தலைவர் உட்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர்களின் கடமையாகும்.
2. நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் கூட்டங்களுக்கு தலைமை வகித்து உரிய செயல்முறையொன்றை பின்பற்றுவதனை உறுதிப்படுத்துதல் வெண்டும்.
3. அனைத்து நம்பிக்கைப் பொறுப்பாளர்களையும் சமமாகக் கருதி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன் நிபுணத்துவத் துறைகளுக்கு உச்சளவு பங்களிப்பை வழங்கி பயன்மிக்க அலுவலில் ஈடுபடுவதற்கு அவர்களை ஊக்குவித்தல் வேண்டும்.
4. நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் அலுவல்கள் சம்பந்தமான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்குரியதென்பதனை தலைவர் உறுதி செய்தல் வேண்டும்.
5. பொறுப்புக்கள் தெளிவான வகையில் பிரிக்கப்பட்டிருப்பதனை உறுதி செய்தல் மற்றும் அதிகாரம் மற்றும் அதன் பிரயோகத்திற்கிடையில் சமநிலையைப் பேணி வருவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் தலைவரின் பொறுப்பாகும்.

# நிறுவனத்தின் நல்லாளுகை...

## நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் செயற்பாடு

மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் ஊடாக நிறுவப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இணங்க இனங்காணப்பட்ட நோக்குகளின் ஊடாக நிறுவனத்தை சிறப்பான வகையில் வழிநடாத்தும் மற்றும் செயற்பாடுகள் சறிப்பான வகையில் முகாமைப்படுத்தப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் பொறுப்பு நம்பிக்கை பொறுப்பாளர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வளங்களை வெளிப்படைத்தன்மையுடன் பயன்படுத்தல், சரியான முறையில் கணக்குகளைப் பேணிவரல் மற்றும் அனைத்து நியதிச்சட்ட ஒழுங்குபடுத்தல் தேவைகளுக்குப் பொருந்தும் பிரகாரம் சரியான முறையில் அறிக்கைகளைப் பேணிவரல் தொடர்பாக நம்பிக்கை பொறுப்பாளர் சரப பொறுப்புக் கூறும்.
கீழ் குறிப்பிடப்படும் அலுவல்களை உறுதி செய்தல் நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் பொறுப்பாகும்

1. நிறுவகத்தின் மூலோபாய இலக்குகள் நிறுவப்பட்டுள்ளதனை உறுதிசெய்தல்.
2. மூலோபாய இலக்குகளை அடைந்துகொள்வதற்காக வழிகாட்டல் மற்றும் தலைமைத்துவத்தை வழங்குதல்
3. தலைமை அலுவலர் மற்றும் பணிக் குழுவுக்கு தேவையான நிபுணத்துவ அறிவு மற்றும் சாத்தியத்தகவு நிலவுவதனை உறுதி செய்தல்.
4. வினைத்திறன்மிக்க நிர்வாகம் மற்றும் ஆபத்து முகாமைத்துவ முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதி செய்தல்.
5. நிறுவனத்தின் முகாமைத்துவ அலுவல்கள் சிறப்பான வகையில் கணக்காணிக்கப்படுவதனை உறுதி செய்தல்.
6. நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பங்குதாரர்கள் என்ற வகையில் போதுமானளவு அறிக்கைப்படுத்தல்களை மேற்கொள்ளுதல் மற்றும் தேவையான வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதனை உறுதிப்படுத்தல்.
7. வளங்கள் மற்றும் சொத்துக்களை பொறுப்புக்களாக கருதுவதனை உறுதிப்படுத்தல்
8. நம்பிக்கை பொறுப்பாளர் சபையினால் முதலீட்டுக் குழு, கணக்காய்வுக் குழு என்பவற்றை நியமித்தல் மற்றும் கணக்காணித்தல்.
9. நடைமுறைகள் மற்றும் நன்னெறிக் கோவை போன்ற நிறுவனத்தின் நிர்வாக மூலோபாயங்களை இறிமுகஞ் செய்தல்.
10. தனது அனைத்து அலுவல்களையும் நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கமைய நிறைவேற்றுதல் நம்பிக்கைப் பொறுப்பாரள் சபையின் பொறுப்பாகும்.

# நிறுவனத்தின் நல்லாளுகை...

### நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் கூட்டங்கள்


நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் கூட்டங்களில் நிறுவனம்சார் செயற்பாடுகள் மற்றும் பெறுபேறுகளை அங்கீகரித்துக்கொண்ட வரவு செலவுகள் மற்றும் ஏற்புடைய தரங்களுடன் ஒப்பீட்டு ரீதியில் மிக நுணுக்கமாக அவதானித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் நம்பிக்கை பொறுப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு நம்பிக்கை பொறுப்பாளர் சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்ச்சி நிரல் மற்றும் ஏனைய கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மீது கவனத்தைச் செலுத்துகின்றது. அனைத்து கூட்ட அறிக்கைகளையும் தலைவர் அங்கீகரித்து உறுதிப்படுத்துவார். நம்பிக்கை பொறுப்பாளர் சபை 02 மாதங்களுக்கொரு தடவை கூடுவதுடன் தேவையேற்படின் விசேட நிர்வாகக் குழுக் கூட்டங்களும் நடாத்தப்படும். 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டில் நடாத்தப்பட்ட கூட்டங்கள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் பங்கேற்பு பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | பங்குபற்றிய பொறுப்பாளர் / பொறுப்பாளர்கள | பதவி | පැවැත්වූ රැස්වීම් ගණන | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கௌரவ பிரியசாத் டெப் | பிரதம நீதியரசர் | √ | √ | √ | √ | √ |
| 2 | கௌரவ மலிக் சமரவிக்ரம | அபிவிருத்தி மூலோபாயங்கள், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் | √ | --- | -- | --- | -- |
| 3 | கலாநிதி கௌரவ விஜேதாச ராஜபக்ஷ | உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் | -- | √ | √ | √ | √ |
| 4 | திருமதி சாந்தனீ விஜேவர்தன | செயலாளர், அபிவிருத்தி மூலோபாயங்கள், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு. | √ | --- | -- | --- | -- |
| 5 | திரு. ஜே.ஜே.ரத்னசிரி | செயலாளர், உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | -- | √ | √ | √ | √ |
| 6 | டீ.டீ.திசாநாயக்க | செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | √ | --- | -- | --- | -- |
| 7 | திரு.எஸ்.எஸ்.ஹெட்டிஆரச்சி | செயலாளர், கல்வி அமைச்சு | √ | √ | -- | -- | -- |
| 8 | எஸ்.வீ.டீ.கேசரலால் குணசேக்கர | நியமிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர் | | √ | √ | √ | √ |
| 9 | கலாநிதி விக்கிரம வீரசூரிய | நியமிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர் | √ | --- | -- | --- | -- |
| 10 | மருத்துவர் திரு.டீ.கே.டீ.மெதிவ் | நியமிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர | | √ | √ | √ | √ |
| 11 | சட்டத்தரணி அனில் ராகருணா | நியமிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர | √ | --- | -- | --- | -- |

### நம்பிக்கை பொறுப்பாளர் சபைக்குரிய குழுக்கள்

1. முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழு
2. முதலீட்டுக் குழு
3. பெறுகைக் குழு
4. ஊழியர் நலன்புரி சபைக் குழு

# நிறுவனக் கட்டமைப்பு



பணியாட் தொகுதி

| சேவை வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | நிலவும் எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 1 | 1 | |
| இரண்டாம் நிலை | 6 | 2 | 4 |
| மூன்றாம் நிலை | 19 | 8 | 11 |
| முன்னுரிமை | 5 | 2 | 3 |
| மொத்தம் | 31 | 13 | 18 |

மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் குறைந்த பணியாட் தொகுதி செலவை மேற்கொள்ளும் நிறுவனமொன்றாக ஆரம்பம் முதலே மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான பணியாட் தொகுதியொன்றின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளுவதுடன் பணியாட் தொகுதிக்கான நிர்வாகச் செலவானது வருமானத்தின் **0.40%** ஆக இருந்ததுடன் அதில் **0.26%** எனும் மிகக் குறைந்த மட்டத்தில் வைத்திருக்க முடியுமாகியது.

பணியாட் தொகுதியில் தற்போது நிலவும் வெற்றிடங்களை உள்ளக ரீதியிலான பதவியுயர்வு ஊடாக நிரப்புவதற்கும் அதன் பின்னர் ஏற்படும் பதவி வெற்றிடங்களை வெளிவாரியாக விண்ணப்பதாரிகளின் மூலம் நிரப்புவதற்கும் நம்பிக்கை பொறுப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

# தேசிய கணக்காய்வு அலுவலகம்

2019 ஒக்டோபர் 31 ஆம் திகதி

**தலைவர்,**

லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

**லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

1. நிதிக் கூற்றுக்கள்

**1.1 உண்மை நிலைமை கணக்கெடுப்புக் கருத்துரை**

லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள், பொழிப்புச் செய்யப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது ஆணைப் பிரகாரம் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரைப் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் உண்மை நிலைக் கணக்கெடுப்புக் கருத்துரைக்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டிருக்கும் விடயங்களின் ஊடாக ஏற்படும் அழுத்தங்கள் தவிர நிறுவகத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு / இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கங்களுக்கமைய உண்மை மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்புகின்றதென்பது எனது கருத்தாகும்.

1.2 **உண்மை நிலைமை கணக்கெடுப்பு கருத்துரைக்கான அடிப்படை**

இது தொடர்பாக கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) **கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றாமை**

இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் நியமம் 09 இன் 4.1.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிசார் சொத்துக்களின் பெறுமதி தேய்வு, வேறு விபரமான வருமானத்தின் ஊடாக நியாயமான பெறுமதி, இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதி என்ற ரீதியில் வகைப்படுத்தி நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட வேண்டியிருந்தபோதிலும் ரூ.10,232,401,250 பெறுமதிமிக்க நிதிசார் சொத்துக்கள் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை.

(ஆ) **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**கீழே குறிப்பிடப்படும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்படுகின்றன.**

(i) நம்பிக்கை நிதியத்தின் முழு உரிமையுடனான துணைக் கம்பனிகளான நெஷனல் வெல்த் கோப்பரேஷன் மற்றும் நெட்வெல்த் சிகியுரிட்டீஸ் ஆகிய கம்பனிகளுடன் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2005 ஆம் ஆண்டில் பெறுமதி ரூ.12,460,179 தொகைக்கு கணக்கு வைக்கப்பட்டிருந்த நம்பிக்கை நிதியத்திற்குச் சொந்தமான மாலபே இல் அமைந்துள்ள 25 ஏக்கர் காணி சம்பந்தமாக இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்துடன் குத்தகை அடிப்படையின் கீழ் ஒப்பந்தமொன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின்போதும் அந்தக் காணியை தற்போதைய பெறுமதிக்கு மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நம்பிக்கை நிதியத்தின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேய்மானக் கொள்கைக்கமைய சொத்துக்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை அந்த ஆதனங்களை பயன்படுத்துவதற்கு ஆரம்பித்த திகதியிலிருந்து தேய்வுக்குட்படுத்த வேண்டியிருந்தபோதிலும் 2018 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியைக் கவனத்திற்கொள்ளாமல் முழு ஆண்டிற்கும் தேய்வுக்குட்படுத்தியதன் காரணமாக ரூ.181,457 தொகை அதிகமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டுடன் தொடர்பான மருத்துவ மற்றும் திடீர் விபத்துக் காப்புறுதிச் செலவு ரூ.87,500 ஆக இருந்தபோதிலும், எதிர் காலத்திற்காக செலுத்தப்பட்ட ரூ.360,572 உள்ளடங்கலாக மீளாய்வாண்டின் செலவு ரூ.448,072 என நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(v) அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டத்தின் 11 (1) (ஆ) பிரிவின் பிரகாரம் மஹபொல நம்பிக்கை நிதியத்தினால் அபிவிருத்தி லொத்தர் சபையை நிறுவும்போது மேற்கொள்ளப்பட்ட முதலீட்டின் சதவீதத்திற்கு இணங்க மேலதிகத்தை அனுப்புதல் வேண்டும். ஆயினும், மீளாய்வாண்டில் மேலதிகத்திலிருந்து நிதியத்திற்குரிய பங்கு ரூ.1,093,798,978 ஆக இருந்தாலும் அது ரூ.189,198,591 தொகை குறைவாக ரூ.904,600,387 மாத்திரமென நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(vi) 2012 ஆம் ஆண்டு முதல் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான அபிவிருத்தி லொத்தர் சபையின் மேலதிகத்திலிருந்து நம்பிக்கை நிதியத்திற்கு கிடைக்கப்பெற வேண்டியிருந்தபோதிலும் ஜனாதிபதி நிதியத்தினால் அனுப்பப்படாதிருந்த ரூ.835,766,892 தொகையை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய என்னால் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது உண்மை நிலைமை கணக்கெடுப்புக்கான அடிப்படையை வழங்குவதன் நிமித்தம் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுக்கான சாட்சியங்கள் போதுமானவை மற்றும் பொருத்தமானவைகள் என நான் நம்புகின்றேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு மற்றும் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரித்தல் மற்றும் நியாயமான வகையில் சமர்ப்பித்தல் மற்றும் ஊழல் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொய்யான கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களை தயாரிக்க முடியுமாக இருப்பதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது நிதியத்தை தொடர்ந்தும் கொண்டுநடாத்துவதற்கான ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன் நிதியத்தை கலைத்துவிடுவதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாதவிடத்து செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டாலே தவிர தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் நிதியத்தின் தொடர்ச்சியான இருப்புடன் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்திக்கொள்வதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கைப்படுத்தல் செயற்பாடு தொடர்பான பொறுப்பை நிர்வகிக்கும் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் நிதியத்தின் வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக உரிய பிரகாரம் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிவரல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு**

மொத்தமாக, நிதிக் கூற்று ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படும் போதுமானளவிலான பொய் கூற்றுக்களைக் கொண்டிராதவை என நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது எப்போதும் அது அளவு ரீதியில் குறைவான வெளிப்பாடுகளை வெளிப்படுத்திக்கொள்வதற்கான உறுதிப்படுத்திக்கொள்ளல் இல்லாதிருக்கும். ஊழல் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக அளவு ரீதியில் குறைந்த வெளிப்படுத்தல்கள் ஏற்பட முடியுமாக இருப்பதுடன் இந்த நிதிக் கூற்றை அடிப்படையாகக்கொண்டு ஆய்வாளர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில் நியாயம் மற்றும் தெளிவான வகையில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- ஊழல் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான அளவு ரீதியாக பொய்க் கூற்றுக்களின் ஆபத்தை இனங்கண்டுகொள்ளும்போது மற்றும் மதிப்பீடு செய்யும்போது சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடல் ஊடாக ஊழல் அல்லது தவறு காரணமாக ஏற்படும் ஆபத்துக்களை நீக்கிக்கொள்வதற்கு, போதுமானளவிலான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளை பெற்றுக்கொள்ளல் எனது கருத்துக்கு அடிப்படையாகும். அளவு சார்ந்த பொய் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் ஊழல் காரணமாக ஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன் கெட்ட கூட்டணி, பொய் ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் ஊழல் இடம்பெறுவதற்கான காரணங்களாகும்.

- சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக நிறுவகத்தின் உள்ளக நிர்வாகம் தொடர்பான தெளிவைப் பெற்றுக்கொண்டபோதிலும் உள்ளக நிர்வாகத்தின் பயன்தருதன்மை சம்பந்தமாக கருத்தை தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமாக அளவு சார்ந்த நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களின் அடிப்படையில் கணக்கீட்டிற்கான நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமான அடிப்படையை பயன்படுத்திக்கொள்ளும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதுமான நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக நான் தீர்மானித்தால் நிதிக் கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது கருத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் முன்வைத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டதுடன் அதற்காக அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமை தொடர்பாக மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக நிர்வகிக்கும் தரப்புக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

## 2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய எனது அறிக்கையின் உண்மை நிலைமை கணக்கெடுப்பு கருத்துரைக்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கம் தவிர, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களை நான் பெற்றுக்கொண்டதுடன், எனது ஆய்வின்போது நிறுவகம் உரிய நிதி அறிக்கைகளை பேணி வந்துள்ளமையை காண முடியுமாக இருக்கின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இயைந்துள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய இந்த அறிக்கையின் 1.2 (ஆ) பந்தியின் (1) மற்றும் (v) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர கைடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், முன்வைக்கப்பட்டிருக்கும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் மற்றும் அளவு சார்ந்த விடயங்களுக்குள் வரையறுக்கப்பட்ட வகையில் கீழ் குறிப்பிடப்படும் கூற்றுக்களை வெளியிடுமளவிற்கான எந்த விடயமும் எனது கவனத்திற்குட்படவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய நிதியத்தின் நிர்வாக சபையின் எவரேனுமொரு அங்கத்தவருக்கு நிதியத்துடன் தொடர்புடைய ஏதேனுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது வேறு விதத்தில் பொதுவான வர்த்தக நிலைமைக்குப் புறம்பான வகையில் தொடர்பு இருத்தல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய கீழ் குறிப்பிடப்படும் அவதானிப்புக்கள் தவிர ஏதேனுமொரு ஏற்புடைய எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது சபையின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்டஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுடன் இயைந்து செல்லாத வகையில் நடவடிக்கை மேற்கொண்டிருத்தல்.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் அல்லது நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட ஏற்பாடுகள் | விபரம் |
|---|---|
| 2003 ஜுன் 02 ஆம் திகதிய, 3/2015 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு செய்யப்பட்ட ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தபோதிலும் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2019 ஜுலை 31 ஆம் திகதியன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய நிறுவகத்தின் அதிகாரங்கள், அலுவல்கள் மற்றும் கடமைகளுடன் இயைந்து செல்லாத வகையில் அலுவல் மேற்கொண்டிருந்தமை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய நிதியத்தின் வளங்களை சிக்கனமாக, வினைத்திறனுடன் மற்றும் பயன்மிக்க வகையில் உரிய காலப் பகுதிக்குள் குறிப்பிட்ட ஏற்புடைத்தாகும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க பெற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தாதிருந்தமை.

**3. ஏனைய அவதானிப்புக்கள்**

(அ) சில பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் நிர்மாண நடவடிக்கைகளுக்காக பாடசாலை அபிவிருத்தி நிதியத்தினால் செலுத்தப்பட வேண்டிய செலவாக மொத்தம் ரூ.3,832,875 தொகையை 2013 ஆம் ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக எவரும் கோரிக்கை விடுக்காமையினால் அதனை யாருக்கு செலுத்த வேண்டுமென இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 வழிகாட்டலுக்கமைய அனைத்து நிறுவனங்களும் பெறுகைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டியிருந்ததுடன் அதில் குறைந்தது மூன்று வருட காலத்திற்கு எதிர்பார்க்கும் பெறுகை அலுவல்கள், தலைமை பெறுகைத் திட்டத்தில் பட்டியலிடப்பட்டிருக்க வேண்டியிருந்தபோதிலும் நிதியத்தினால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2003 ஜூன் 02 ஆம் திகதிய, PED 12 ஆம் இலக்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 பந்திக்கமைய கூட்டுத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டியிருந்தபோதிலும் மீளாய்வாண்டுடன் தொடர்பாக கூட்டுத் திட்டமொன்று மற்றும் செயல் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) **செயற்பாட்டு மீளாய்வு**

(i) கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் பாடசாலைகள், நிறுவனங்கள், அமைப்புக்கள் மற்றும் அவ்வாறான நிறுவனங்களை அமைத்தல் மற்றும் முகாமைப்படுத்தல், தொழில் திறன்கள் மற்றும் திறமைகளை மேம்படுத்திக்கொள்வதற்கு முடியுமான வகையில் தொழிற் பயிற்சி நிறுவகங்களை அமைத்தல் மற்றும் முகாமைப்படுத்தல் அல்லது அமைப்பதற்கு முகாமைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல், கல்வியை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விரிவுரையாளர்களின், ஆசிரியர்களின் மற்றும் அவ்வாறான வேறு நபர்களின் திறன்கள் மற்றும்

ஆற்றல்களை வளர்த்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக உதவி வழங்குதல் எனும் நிதியச் சட்டத்தின் 6.1 பிரிவில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளுதல் மீது மீளாய்வாண்டில் நிதியத்தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கை தகவல் தொழில்நுட்ப (உத்தரவாதம் வரையறுக்கப்பட்ட) நிறுவகத்துடன் (SLIIT) 2005 நவம்பர் 14 மற்றும் 2015 மே 12 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் மற்றும் 2017 அதிமேதகு ஜனாதிபதியவர்களினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞானபத்திற்கான அங்கீகாரத்திற்கமைய நம்பிக்கை நிதியத்திற்கு SLIIT நிறுவகம் தொடர்பில் நிலவிய உரிமை நீக்கப்பட்டிருந்தது. மேலும், 2015 ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தவறானதென இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு மற்றும் ஜனாதிபதி விசேட விசாரணை ஆணைக்குழுவின் கீழ் 2 விசாரணைகள் விசாரிக்கப்பட்டு வருவதுடன் 2019 ஜூலை 12 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் பற்றிய கணக்குக் குழுக் கூட்டத்தில் SLIIT நிறுவகம் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய விதம் சம்பந்தமாக ஒரு மாதத்திற்குள் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு உயர் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் நம்பிக்கை நிதியத்தின் தலைவருக்கு அறிவித்திருந்தபோதிலும் இந்த அறிக்கை வெளியிடப்பட்ட திகதியன்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2018 செப்டெம்பர் 05 ஆம் திகதிய, அப/18/1873/824/020 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய நம்பிக்கை நிதியம் நெஷனல் வெல்த் கோப்பரேஷன் கம்பனியுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட முதலீட்டு முகாமைத்துவ ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, 2019 பெப்ரவரி 28 ஆம் திகதி நெஷனல் வெல்த் கோப்பரேஷன் கம்பனியினால் முகாமைப்படுத்திய முதலீட்டு உடைமை இலங்கை வங்கயின் தாபனக் கிளையில் மஹபொல நம்பிக்கை நிதியத்திற்குரிய தலைமைக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும், அந்த அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய நெஷனல் வெல்த் கோப்பரேஷன் கம்பனியை கலைத்தல் மற்றும் நெட்வெல்த் சிகியுரிட்டீஸ் கம்பனியை விற்பனை செய்யதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தபோதிலும் இதுவரை அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்ட அலுவல்களை நடைமுறைப்படுத்தாமல் மஹபொல நம்பிக்கை நிதியம் இலங்கை வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட 4 பில்லியன் ரூபா கடன் வசதியின் கீழ் பெற்றுக்கொண்ட 1.111 பில்லியன் ரூபா கடன் தொகையைப் பயன்படுத்தி நெட்வெல்த் சிகியுரிட்டீஸ் கம்பனியின் திறைசேரிப் பிணைப் பத்திரங்கள் மற்றும் உண்டியல்களை 2019 மார்ச் 26 ஆம் திகதி கொள்வனவு செய்து மீண்டும் அதனை 2019 மார்ச் 27 ஆம் திகதி 1.113 பில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்திருந்ததுடன் அந்தத் தொகையை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்து 2019 ஜுன் 27 ஆம் திகதி அந்தக் கடன் தீர்க்கப்பட்டிருந்தது.

(v) நம்பிக்கை நிதியச் சட்டத்தின் 6.2 (அ) (இ) (ஈ) பிரிவுகளுக்கமைய, நிதியை ஏற்பாடு செய்துகொள்வதற்காக உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிதி மூலங்களினூடாக அல்லது பௌதீக வளங்களினூடாக வழங்கப்படும் உதவிகள், அன்பளிப்புக்கள் அல்லது பரிசுகளைப் பொறுப்பேற்பதற்கு மற்றும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் லொத்தர் சீட்டிழுப்புக்களை நடாத்துவதற்கான அதிகாரம் நிதியத்திற்கு கிடைத்திருந்தது. ஆயினும் அவ்வாறான மூலங்களினூடாக நிதியைத் திரட்டிக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமல் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசிலுக்காக ஆரம்பத்தில் மொத்தப் பங்களிப்பையும் மஹபொல நம்பிக்கை நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டபொதிலும் பிந்திய காலங்களில் பங்களிப்பின் 49% யும் அரசாங்கத்தினால் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**டப்ளியூ.பீ.சீ.விக்கிரமரத்ன**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# நிதிக்கூற்றுக்கள்

**2018 டிசம்பர் 31 ஆம் திகதி**

**லலித் அத்துலத்முதலி மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்**

**2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 2018 | 2017 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | ரூ. | ரூ. |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 12 | 913,888,938 | 967,925,338 |
| முதலீட்டுச் சொத்துக்கள் | 13 | 12,460,179 | 12,460,179 |
| துணைக் கம்பனிகளில் முதலீடு | 14 | 985,000,000 | 985,000,000 |
| ஏனைய முதலீடுகள் | 15 | 2,200,000 | 2,200,000 |
| நிதிசார் சொத்துக்கள் | 16 | 10,232,401,250 | 9,861,439,390 |
| | | **12,145,950,367** | **11,829,024,907** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| ஏனைய சொத்துக்கள் | 17 | 2,287,729 | 1,995,810 |
| முற்பணம் மற்றும் முற் கொடுப்பனவுகள் | 18 | 1,579,729 | 1,797,859 |
| பெறப்பட வெண்டியவை | 19 | 155,363,740 | 57,450,549 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 20 | 140,608,323 | 7,150,101 |
| | | **299,839,521** | **68,394,319** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **12,445,789,888** | **11,897,419,226** |
| **மொத்தப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| அட்டுறு நிதியம் | | 10,147,376,951 | 10,147,376,951 |
| தேறிய மேலதிகம் | | 2,148,934,763 | 1,697,374,151 |
| **மொத்த சாதாரண பங்குகள்** | | **12,296,311,714** | **11,844,751,102** |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வூதிய அனுகூலங்கள் மற்றும் கடப்பாடுகள் | 21 | 3,172,760 | 2,173,542 |
| | | **3,172,760** | **2,173,542** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| அட்டுறு மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை | 22 | 146,305,414 | 50,494,582 |
| | | **146,305,414** | **50,494,582** |
| **மொத்தப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்** | | **12,445,789,888** | **11,897,419,226** |

இந்த நிதிக் கூற்றை தயாரித்தல் மற்றும் முன்வைப்பதற்கு மஹபொல நம்பிக்கை நிதியம் பொறுப்பேற்கின்றது. நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சார்பாக கையொப்பமிடப்படுகின்றது :

**ஒப்பம்:**
எம்.எம்.பீ.கே.மாயாதுன்னே
செயலாளர்
நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு
பதவி வழி அடிப்படையில் மஹபொல நம்பிக்கை நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பாளர்

**ஒப்பம்:**
எஸ்.வீ.டீ.கே.குணசேக்கர
நியமன நம்பிக்கை பொறுப்பாளர்
மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை

**ஒப்பம்:**
எம்.பராக்கிரம
பணிப்பாளர்,மஹபொ
ால உயர் கல்வி
புலமைப் பரிசில்

05 முதல் 22 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கை மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களில் பிரதான பகுதியாகும்.

லலித் அத்துலத்முதலி மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று

| | குறிப்புக்கள் | 2018<br>ரூ. | 2017<br>ரூ. |
|---|---|---|---|
| வருமானம் | 7 | 1,868,593,335 | 1,117,644,199 |
| நேரடிச் செலவுகள் | 8 | (1,325,566,790) | (1,256,329,028) |
| | | 543,026,545 | (138,684,829) |
| ஏனைய வருமானங்கள் | 9 | 3,753,459 | 2,906,632 |
| **மொத்த வருமானம்** | | **546,780,004** | **(135,778,197)** |
| நிர்வாகச் செலவுகள் | 10 | (95,219,392) | (75,078,310) |
| பாடசாலை அபிவிருத்திச் செலவுகள் | 11 | - | (16,683,385) |
| **மெபத்தச் செலவுகள்** | | **(95,219,392)** | **(91,761,695)** |
| **செலவுகளை விஞ்சிய தேறிய வருமானம்** | | **451,560,612** | **(227,539,892)** |
| **வரிகளுக்கு முந்திய மேலதிகம்/ (குறைவு)** | | **451,560,612** | **(227,539,892)** |
| **வருமான வரிச் செலவுகள்** | | - | - |
| **தேறிய மேலதிகம் / (குறைவு)** | | **451,560,612** | **(227,539,892)** |
| **ஏனைய விபரமான வருமானங்கள்** | | - | - |
| **ஆண்டிற்கான மொத்த விபரமான செலவுகள்** | | **451,560,612** | **(227,539,892)** |

05 முதல் 22 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கை மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களில் பிரதான பகுதியாகும்.

**லலித் அத்துலத்முதலி மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்**
**பொதுவான பங்கு மாற்றங்கள் பற்றிய கூற்று**

| | அட்டுறு நிதியம் | தேறிய மேலதிகம் குறைவு | மொத்தத் தொகை |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| **2017 ஜனவரி 01 ஆம் திகதியன்று மீதி** | 10,147,376,951 | 1,952,998,663 | 12,100,375,614 |
| ஆண்டிற்கான தேறிய மேலதிகம் / (குறைவு) | - | (227,539,892) | (227,539,892) |
| NWCL இடமிருந்து பெறப்பட வேண்டிய வட்டி | - | (28,084,620) | (28,084,620) |
| **2017 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மீதி** | **10,147,376,951** | **1,697,374,151** | **11,844,751,102** |
| ஆண்டிற்கான தேறிய மேலதிகம் / (குறைவு) | - | 451,560,612 | 451,560,612 |
| **2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மீதி** | **10,147,376,951** | **2,148,934,763** | **12,296,311,714** |

05 முதல் 22 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கை மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களில் பிரதான பகுதியாகும்.

**லலித் அத்துலத்முதலி மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்**
**2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று**

| | 2018<br>ரூ. | 2017<br>ரூ. |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள் ஊடான காசுப் பாய்ச்சல்** | | |
| தேறிய மேலதிகம் / (குறைவு) | 451,560,612 | (227,539,892) |
| **சீர்படுத்தல்கள்:** | | |
| தேய்மானம் | 56,039,045 | 54,751,056 |
| நிலையான சொத்துக்களை அகற்றியமையினால் பெற்ற இலாபம் | (3,457,750) | (8,000) |
| பணிக்கொடைக்கான செலவினம் | 999,218 | 805,422 |
| **தொழிற்பாட்டு மூலதன மாற்றத்திற்கு முன்னரான செயற்பாடு / (குறைவு)** | **505,141,125** | **(171,991,414)** |
| **தொழிற்பாட்டு மூலதன மாற்றம்** | | |
| பெறப்பட வேண்டியவை அதிகரிப்பு / குறைவு | (97,986,980) | 88,739,370 |
| செலுத்த வேண்டியவை அதிகரிப்பு / குறைவு | 95,810,832 | 39,738,861 |
| தொழிற்பாடுகளினூடாக கிடைக்கப்பெற்ற காசு | (2,176,148) | 128,478,231 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் பெற்ற தேறிய உள்ளக காசுப் பாய்ச்சல் / வெளிவாரியான காசுப் பாய்ச்சல்** | **502,964,977** | **(43,513,183)** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளினூடாக கிடைக்கப்பெற்ற காசுப் பாய்ச்சல்** | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களை கையகப்படுத்தல் | (2,002,645) | (11,103,041) |
| நிலையான சொத்துக்களை அகற்றியதனூடாக கிடைக்கப்பெற்ற விற்பனை வருமானம் | 3,457,750 | 8,000 |
| நிதிசார் சொத்துக்கள் முதலீடு / (மீளப்பெறல்) | (370,961,860) | (46,657,726) |
| **முதலீட்டுச் செயற்பாடுகள் மூலமான தேறிய உள்ளக உள்ளக காசுப் பாய்ச்சல் / வெளிவாரியான காசுப் பாய்ச்சல்** | **(369,506,755)** | **(57,752,767)** |
| **நிதிசார் செயற்பாடுகள் மூலமான காசுப் பாய்ச்சல்** | | |
| செலுத்தப்பட்ட இலாபப் பங்கு | - | - |
| **நிதிசார் செயற்பாடுகள் மூலமான உள்ளக காசுப் பாய்ச்சல் / வெளிவாரியான காசுப் பாய்ச்சல்** | - | - |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் தேறிய குறைவு / (அதிகரிப்பு)** | 133,458,222 | (101,265,950) |
| 2018.01.18 ஆம் திகதியன்று காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 7,150,101 | 108,416,051 |
| **2018.12.31 ஆம் திகதியன்று காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | **140,608,323** | **7,150,101** |

05 முதல் 22 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கை மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களில் பிரதான பகுதியாகும்.

## லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம்

### 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### நிறுவனம் சார்ந்த தகவல்கள்

### 1.1 பொதுவான விடயங்கள்

லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் (அறக்கட்டளை நிதியம்) 1981 இன் 66 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நம்பிக்கை நிதியமொன்றாக இருப்பதுடன் இந்த நம்பிக்கை நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு நம்பிக்கை பொறுப்பாளர் சபையொன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவகம் கொழும்பு 07, தர்மபால மாவத்தையில் இலக்கம் 191 இல் அமைந்துள்ள ஜே.ஆர்.ஜயவர்தன நிலையத்தின் 4 ஆம் மாடியில் அமைந்துள்ளது.

### 1.2 பிரதான அலுவல்கள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

இந்த நிதியம் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளாத இளைஞர் யுவதிகளுக்கு உயர்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்குப் போன்றே மேம்படுத்தப்பட்ட வசதிகளின் ஊடாக உயர்கல்விக்கான வாய்ப்பை வழங்குவதற்காக புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது.

#### 1.2.1 மஹபொல நம்பிக்கை நிதியம்

இந்த மஹபொல நிதியத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்கள்:

(அ) இளைஞர்களுக்கு உயர்கல்விக்கான வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்;

(ஆ) தனது இரண்டாம்நிலைக் கல்வியை திருப்திகரமான முறையில் பூரணப்படுத்திய உயர்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு சந்தர்ப்பத்திற்கேற்ப தமது கல்வியை, தொழில்நுட்பக் கல்வியை பல்கலைக்கழகமொன்றில் அல்லது தொழில்நுட்ப நிறுவகமொன்றில் அல்லது உயர்கல்வி நிறுவகமொன்றில் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு உதவி வழங்குதல்;

(இ) இளைஞர்களுக்கு தமது தொழில் திறன்கள் மற்றும் தேர்ச்சியை மேம்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி தொழிற் பயிற்சி நிறுவகங்களை அமைத்தல் மற்றும் முகாமைத்துவத்திற்கு ஒத்துழைப்பை வழங்குதல்;

(ஈ) பாடசாலைகள், கல்வி நிறுவகங்கள், அமைப்புக்கள் மற்றும் கல்வித் துறையின் முன்னேற்றம் கருதி நடவடிக்கை மேற்கொள்ளும் அவ்வாறான நிறுவனங்களை தாபித்தல் மற்றும் அந்த நிறுவனங்களை முகாமைப்படுத்தல் மற்றும் பேணிவருவதற்காக ஒத்துழைப்பு வழங்குதல்;

(உ) விரிவுரையாளர்களின், ஆசிரியர்களின் மற்றும் கல்வித்துறையின் எதிர்காலப் பயணத்தின் நிமித்தம் அவ்வாறான நபர்களின் திறன்கள் மற்றும் தேர்ச்சியை அதிகரித்துக்கொள்ளல் மற்றும் மேம்படுத்தல்.

2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 1.3 வெளியிடுவதற்கான அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட திகதி

2019.07.24 ஆம் திகதி நடைபெற்ற நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் பிரேரணை அங்கீகாரத்தின் பிரகாரம் லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.

## 2. நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

### 2.1 இணக்கக் கூற்று

2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று, கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் உள்ளடங்கலாக காசுப் பாய்ச்சல் கூற்று இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விதிக்கப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS) மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களைக் (LKAS) (இங்கு இதனகத்துப் பின்னர் SLFRS எனக் குறிப்பிடப்படும்) கொண்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2.2 அளவீட்டு அடிப்படை

வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலே தவிர அட்டுறு அடிப்படை மற்றும் வரலாற்று ரீதியிலான கிரய அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் பிரயோக மற்றும் பயன்பாட்டிலுள்ள இலங்கை ரூபாவில் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 2.3 அளவு மற்றும் உருவகப்படுத்தல்

நிதிக் கூற்றுக்களை முன்வைக்கும் இலங்கை கணக்கீட்டு நியமம் 01 (LKAS 01)இற்கமைய இணையான உருப்படிகளில் ஒவ்வொரு அளவு ரீதியிலான நிதிக் கூற்றுக்களில் வெவ்வேறாக முன்வைக்கப்பட்டுள்ளது. அசாதாரண தன்மை அல்லது செயற்பாட்டு உருப்படிகள் அவை அளவு ரீதியில் இல்லையெனில் தவிர தனித் தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இனங்காணப்பட்ட பெறுமதியை பதிலீடு செய்வதனை வலுப்பெறச் செய்ய முடியுமான சட்ட ரீதியான உரிமையொன்று நிலவுமாயின் மாத்திரம் நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புக்களை பதிலீடு செய்து நிதி நிலைமைக் கூற்றில் தேறிய பெறுமதி அறிக்கைப்படுத்தப்படுவதுடன் தேறிய அடிப்படையில் தீர்ப்பதற்கு அல்லது கைத்தேறியதற்கு இணையாக பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கான விருப்பம் இருப்பின் மாத்திரமே அவ்வாறு மேற்கொள்ளப்படும். நிதிசார் கொள்கைகளில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு கணக்கீட்டு நியமத்தையும் பொருள்கூறல் ஊடாக விதிக்கப்பட்டிருப்பின் அல்லது அனுமதி வழங்கப்பட்டிருந்தாலே தவிர வருமானக் கூற்றில் வருமானம் மற்றும் செலவுகள் பதிலீடு செய்யப்பட மாட்டாது.

### 2.4 ஒப்பீட்டு ரீதியிலான தகவல்கள்

புதிய இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் நியமங்களை (SLFRS) பயன்படுத்திக்கொள்ளும் பெறுபேறாக மாற்றியமைக்க வேண்டியேற்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் தவிர நம்பிக்கை நிதியத்தினால் நிதிக் கூற்றுக்களை முன்வைக்கும் LKAS 01 பிரகாரம் முன்னைய ஆண்டில் பயன்படுத்திக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த ஆண்டிலும் உறுதியான வகையில் பயன்படுத்திக்கொள்ளப்பட்டன.

## 3. விசேட கணக்கீட்டுக் கொள்கை பொழிப்பு

நம்பிக்கை நிதியத்தினால் நிதிக் கூற்றை தயாரிக்கும்போது பயன்படுத்திக்கொள்ளப்பட்ட விசேட கணக்கீட்டுக் கொள்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. கீழ் குறிப்பிடப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டாலே தவிர இந்த நிதிக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து காலப் பகுதிகளுக்கும் நிச்சயமாக பயன்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது.

## 3.1 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

### 3.1.1 இனங்கண்டுகொள்ளும் அடிப்படை

சேவை வழங்கும் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ளப்படும் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் போன்ற தொட்டுணர முடியுமான (உருவமான) உருப்படிகளை ஒரு வருடத்திலும் அதிகளவு காலம் பயன்படுத்திக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

சொத்துக்கள் சார்ந்த எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் நிறுவனத்திற்குள் வரும் ஆற்றல் நிலவுமாயின் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் இனங்கண்டுகொள்ளப்படுவதுடன் சொத்துக்களுக்கான செலவுகள் நம்பகத் தன்மையுடன் கணக்கிட முடியும்.

### 3.1.2 அளவீட்டு அடிப்படை

சொத்துக்களாக இனங்கண்டுகொள்வதற்குப் பொருத்தமான சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழான உருப்படியொன்று ஆரம்பமாக கிரயத்திற்கமைய அளவிடப்படும். குறிப்பிட்ட சொத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக நேரடியாக மேற்கொள்ளப்படும் செலவு மற்றும் பின்னர் அதற்காக ஒரு பகுதியை சேர்த்துக்கொள்வதற்கு அல்லது பழைய பகுதிக்குப் பதிலாக புதிய பகுதியொன்றை சேர்த்துக்கொள்வதற்கு செலவாகும் தொகை செலவுக்குள் (கிரயத்திற்குள்) உள்ளடங்கும். சுயமாக உருவாக்கப்பட்ட சொத்துக்களுக்கான மூலப் பொருட்களுக்காக செலவழிக்கப்படும் செலவுகள் மற்றும் நேரடி ஊழியம், உருப்படியைக் கொண்டுவரல், அவை வைக்கப்படும் இடத்தில் வைத்தல் மற்றும் மூலதனக் கடன்பெறல் செலவு என்பன நேரடியாக வெளிப்படுத்தப்படும் வேறு எந்த வகையான செலவும் உள்ளடக்கப்படும். கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் குறிப்பிட்ட உபகரணத்தின் செயற்பாட்டிற்காக அத்தியாவசியமாயின் அதனை கணனி உபகரணத்தின் ஒரு பகுதியாக மூலதனப்படுத்தப்படும்.

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழான உருப்படியொன்றின் ஒரு பகுதியில் பயன்மிக்க ஆயுட்காலம் நிலவும்போது அவை சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் தனித் தனியான உருப்படிகளாக (பிரதான கூறு) இனங்காணப்படும்.

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை வடிவமைப்பதற்கான செலவுகள் மற்றும் கொள்வனவு அல்லது நிர்மாணத்திற்கான செலவுகள் சம்பந்தமான அறிக்கைகள் மற்றும் குறைந்த திரண்ட தேய்வுகள் மற்றும் திரண்ட சேதங்கள் மீதான நட்டத்திற்கான எந்தவொரு துணைச் செலவுகளும் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படும்.

### 3.1.3 பின்னரான (அடுத்தடுத்த) செலவுகள்

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் உருப்படியொன்றின் ஒரு பகுதியினுள் உள்ளடங்கியுள்ள எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் வெளிவருவதற்கான வாய்ப்புக்கள் நிலவுமாயின் மற்றும் செலவுகளை நம்பகத் தன்மையுடன் அளவிட முடியுமாயின் அவ்வாறான ஒரு பகுதியின் உருவாக்கச் செலவு அந்த உருப்படியின் ஏற்புப் பெறுமதிக்கு இனங்கண்டு கொள்ளப்படும். சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை அன்றாடம் பராமரிப்பதற்கான செலவுகளை செலவிடப்படும் விதத்தில் இலாபம் அல்லது நட்டம் என்ற ரீதியில் கூற்றில் உள்ளடக்கிக் கொள்ளப்படும்.

### 3.1.4 பழுதுபார்ப்புக்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்

பழுதுபார்ப்புக்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் அவை மேற்கொள்ளப்பட்ட நிதிசார் காலத்துடன் தொடர்பான வகையில் இலாபம் அல்லது நட்டம் என்ற ரீதியில் குறிப்பிடப்படும். பிரதான புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான செலவுகள் சொத்துக்களின் ஏற்புப் பெறுமதியில் உள்ளடக்கப்படுவதுடன் மேலதிகமாகக் காணப்படும் சொத்துக்களில் கிட்டிய காலப் பகுதியில் இனங்கண்டுகொள்ளப்படும் ஒரு பகுதி எதிர்கால பொருளாதார அனுகூலங்களாக பதிலீடு செய்யப்படும். பிரதான புனரமைப்புடன் தொடர்புடைய சொத்துக்களின் மீதி பயன்மிக்க ஆயுட்காலத்தில் கவனம் செலுத்தப்படும்.

### 3.1.5 இனங்கண்டுகொள்ளலை நீக்குதல் (அகற்றுதல்)

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை நீக்குவதாயின் அல்லது எதிர்கால அனுகூலங்களை எதிர்பார்க்க முடியாவிட்டால் அவற்றை இனங்கண்டுகொள்வதிலிருந்து தவிர்ந்துகொள்ளப்படும். சொத்துக்களை இனங்கண்டு கொள்வதனைத் தவிர்த்துக்கொள்வதனால் ஏற்படும் எந்தவொரு இலாபம் அல்லது நட்டம் (தேறிய அகற்றல் இலாபம் மற்றும் சொத்துக்களின் ஏற்புப் பெறுமதிக்கிடையிலான வேறுபாடு என்ற ரீதியில் கணக்கிட்டு) குறிப்பிட்ட ஆண்டின் "ஏனைய தொழிற்பாட்டு வருமானங்களாக" இனங் கண்டுகொள்ளப்படும்.

### 3.1.6 தேய்வுகள்

சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார அனுகூலங்களில் எதிர்பார்க்கப்படும் நுகர்வோர் செயல்முறை கிட்டிய வகையில் வெளிப்படுத்தப்படுவதனால் சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் போன்ற உருப்படிகளின் அனைத்துப் பகுதிகளிலும் மதிப்பீடு செய்யப்பட்ட ஆயுட்காலத்திற்கமைய சரளமான நிரல் அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தின் அடிப்படையில் தேய்வு இனங்கண்டுகொள்ளப்படும்.

மதிப்பீடு செய்யப்பட்ட பயன்மிக்க ஆயுட்காலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்;

| | |
|---|---|
| கட்டிடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 20 வருடங்கள் |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 05 வருடங்கள் |
| அலுவலக உபகரணங்கள் | 05 வருடங்கள் |
| கணனிகள் மற்றும் துணைக் கருவிகள் | 04 வருடங்கள் |
| வாகனங்கள் | 04 வருடங்கள் |

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் போன்ற உருப்படிகளின் ஒவ்வொரு விசேட பகுதிக்கும் தேய்வடையும் வீதத்தை அவற்றைப் பயன்படுத்தும் காலத்தின்போது தீர்மானிக்கப்படும். அதாவது, முகாமைத்துவத்தினால் எதிர்பார்க்கப்படும் விதத்தில் செயற்பாட்டு நிலைமையில் இருத்தல். தேய்வு செயல்வழிமுறைகள், பயன்மிக்க ஆயுட்காலம் மற்றும் மீதமுள்ள பெறுமதிகள் அனைத்து அறிக்கைப்படுத்தல் திகதியிலும் மீளாய்வுக்குட்படுத்தி பொருத்தமான பிரகாரம் சீர்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும்.

## 3.2 முதலீட்டுச் சொத்துக்கள்

### 3.2.1 இனங்கண்டுகொள்ளும் அடிப்படை மற்றும் அளவீடு

வாடகை வருமானம் அல்லது மூலதனப் பெறுமதி அதிகரித்தல் அல்லது இநத இரண்டு விடயங்களுக்குமான ஆனாலும் பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின்போது விற்பனை செய்வதற்கல்லாத சொத்துக்கள் முதலீட்டுச் சொத்துக்களாகும். இந்த சொத்துக்கள் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக அல்லது வழங்கல்களுக்காக அல்லது நிர்வாக விடயங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

முதலீட்டுச் சொத்துக்கள் ஆரம்ப சந்தர்ப்பத்தில் அதன் கிரயத்திற்கு அளவீடு செய்யப்படுகின்றது. ஆரம்ப இனங்காணலின் பின்னர் முதலீட்டுச் சொத்துக்கள் அதன் கிரயத்தின் அடிப்படையில் குறிப்பிடப்படுகின்றன.

### 3.2.2 இனங்கண்டுகொள்ளலை நீக்குதல் (அகற்றுதல்)

முதலீட்டுச் சொத்துக்களை அகற்றுதல் அல்லது முதலீட்டுச் சொத்துக்களை நிரந்தரமாகபயன்பாட்டிலிருந்து நீக்குதல் மற்றும் அவ்வாறு அகற்றுவதனால் எதிர்கால பொருளாதார அனுகூலமொன்றை எதிர்பார்க்காதபோது முதலீட்டுச் சொத்துக்கள் இனங்கண்டுகொள்ளப்பட மாட்டாது. முதலீட்டுச் சொத்தொன்றை ஒதுக்குதல் அல்லது அகற்றுதல் காரணமாக ஏற்படும் இலாபம் அல்லது நட்டத்தை அந்த முதலீட்டுச் சொத்தை அகற்றுதல் அல்லது ஒதுக்குதலை மேற்கொண்ட ஆண்டிலேயே இலாப நட்டக் கூற்றில் இனங்கண்டு கொள்ளப்படும்.

**3.2.3 முதலீட்டுச் சொத்தொன்றுக்கு / முதலீட்டுச் சொத்தொன்றிலிருந்து அடுத்தடுத்து மேற்கொள்ளப்படும் மாற்றல்கள்**

உரிமையாளரின் வதிவிடத்தை முடிவுறுத்தல், வேறு தரப்பொன்றுக்கு குத்தகையொன்றை ஆரம்பித்தல் அல்லது நிர்மாணமொன்று அல்லது அபிவிருத்தி நடவடிக்கையொன்று நிறைவு பெறல் போன்ற சாட்சிகள் ஊடாக பயன்பாட்டில் மாற்றமொன்று ஏற்பட்டால் மாத்திரம் முதலீட்டுச் சொத்தொன்றுக்கு மாற்றும் அலுவல் மேற்கொள்ளப்படும்.

உரிமையாளரின் வதிவிடத்தை ஆரம்பித்தல் அல்லது விற்பனை செய்யும் நோக்கத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்தல் போன்ற சாட்சிகள் ஊடாக பயன்பாட்டில் மாற்றமேட்பட்டால் மாத்திரம் முதலீட்டுச் சொத்தொன்றிலிருந்து மாற்றல்கள் மேற்கொள்ளப்படும்.

முதலீட்டுச் சொத்தொன்றிலிருந்து உரிமையாளரின் சொத்தொன்றுக்கு மாற்றும்போது பின்னரான காலத்திற்குரிய கணக்கீட்டு அலுவல்களுக்காக கணிசமானளவு அதன் சொத்துக்கள் கிரயமானது பயன்பாட்டில் மாற்றம் ஏற்பட்ட தினத்தில் அதன் நியாயமான பெறுமதியாகும். உரிமையாளர் வசிக்கும் சொத்தொன்றாக கம்பனி பயன்படுத்தினால் அது முதலீட்டுச் சொத்தொன்றாக இருப்பதுடன் அதன் பயன்பாட்டில் மாற்றமொன்று ஏற்படும் தினம் வரையும் சொத்துக்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைக்கமைய அந்தச் சொத்துக்கு கம்பனி பொறுப்புக் கூற வேண்டும்.

பங்கொன்றை முதலீட்டுச் சொத்தொன்றாக மாற்றும்போது சொத்தின் நியாயமான பெறுமதிக்கமைய குறிப்பிட்ட தினத்தில் அதன் முழுமையான ஏற்புப் பெறுமதியில் நிலவும் வேறுபாடு இலாப நட்டக் கூற்றில் இனங்கண்டுகொள்ளப்படும். கம்பனியினால் நிர்மாணிக்கப்பட்ட முதலீட்டுச் சொத்தொன்றில் மேற்கொள்ளப்படும் நிர்மாணப் பணிகள் அல்லது மேம்படுத்தல் நடவடிக்கைகள் கம்பனியினால் நிறைவு செய்யப்படும்போது சொத்துக்களின் நியாயமான மதிப்புக்கமைய குறிப்பிட்ட தினத்தில் மற்றும் அதன் முன்னைய ஏற்புப் பெறுமதியில் நிலவும் வேறுபாடு இலாப நட்டக் கூற்றில் இனங்கண்டுகொள்ளப்படும்.

**3.2.4 நிதி சாராத சொத்துக்களின் சேதம்**

சொத்தொன்றின் சேதம் சம்பந்தமான உணர்த்துதல் எச்சரிக்கை இருக்கின்றதா என அனைத்து அறிக்கைப்படுத்தல் தினத்திலும் மஹபொல நம்பிக்கை நிதியத்தினால் மதிப்பீட்டிற்குட்படுத்தப்படுகின்றது. ஏதேனும் உணர்த்துதல் இருப்பின் அல்லது சொத்தொன்றுக்காக வருடாந்த சேதமடைதல் ஆய்வு தேவைப்படுமாயின் நிதியத்தினால் சொத்தின் மீள அறவிட்டுக்கொள்ள முடியுமான பெறுமதி மதிப்பீடு செய்யப்படும். சொத்தொன்றின் காசுப் பிறப்பாக்க அலகொன்றின் (CGU) விற்பனைச் செலவு கழிக்கப்பட்ட நியாயமான பெறுமதி மற்றும் அதன் பயன்பாட்டுப் பெறுமதி ஆகிய இரண்டில் அதிகமான பெறுமதி சொத்தொன்றின் மீள அறவிட்டுக்கொள்ள முடியுமான பெறுமதியாகும். சொத்தொன்று காசுப் பாய்ச்சலைப் பிறப்பிக்காத சந்தர்ப்பங்களில் இது தனிச் சொத்தொன்றாக தீர்மானிக்கப்படுவதுடன் ஏனைய சொத்துக்கள் அல்லது சொத்துக்களிலிருந்து அநேகமாக சுயாதீனமானதாக இருக்கும். சொத்தொன்றின் அல்லது காசு பிறப்பாக்கி அலகொன்றின் ஏற்புப் பெறுமதி அதன் மீள அறவிட்டுக்கொள்ள முடியுமான பெறுமதியை விஞ்சும் சந்தர்ப்பமொன்றின்போது சொத்து சேதத்திற்குட்பட்டதாக கருதப்படுவதுடன் அந்த சொத்தை அதன் மீள அறவிட்டுக்கொள்ள முடியுமான பெறுமதியில் குறித்துக்கொள்ளப்படும்.

பயன்படுத்தப்பட்ட பெறுமதியை மதிப்பீடு செய்யும்போது பணத்தின் காலப் பெறுமதி மற்றும் சொத்திற்கு சிறப்பான ஆபத்துக்களில் நடப்பு சந்தைப் பெறுமதி மதிப்பீட்டை வெளிப்படுத்தும் வரிகளுக்கு முன்னரான கழிவு வீதங்களைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் அவற்றின் நிகழ்கால பெறுமதிக்கு கழிவு விதிக்கப்படும். விற்பனைக் கிரயம் கழிக்கப்பட்ட நியாயமான பெறுமதியைத் தீர்மாணிக்கும்போது கிட்டிய சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் (பணப் பரிமாற்றங்கள்) இருப்பின் அவை கவனத்திற்கொள்ளப்படும். அவ்வாறான கொடுக்கல்வாங்கல்களை இனங்கண்டுகொள்ள முடியாவிட்டால் பொருத்தமான கணக்கீட்டு மாதிரி பயன்படுத்திக் கொள்ளப்படும்.

## 3.3 துணைக் கம்பனிகளில் முதலீடுகள் மற்றும் ஏனைய முதலீடுகள்

துணைக் கம்பனிகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் மற்றும் ஏனைய முதலீடுகள் ஆரம்ப கட்டத்தில் கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் செலவொன்றாக இனங்கண்டுகொள்ளப்படும். துணைக் கம்பனிகளை கையகப்படுத்திக்கொள்வதுடன் தொடர்புடைய ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் செலவாக அச் சந்தர்ப்பத்திலேயே வருமானக் கூற்றில் இனங்கண்டுகொள்ளப்படுவதுடன் துணைக் கம்பனிகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் ஆரம்ப கட்டத்தில் இனங்கண்டுகொள்ளப்பட்டதன் பின்னர் திரட்டிய சேதங்களுக்கான நட்டங்களை கழித்ததன் பின்னர் செலவு அடிப்படையில் குறிப்பிடப்படும்.

## 3.4 வெளிநாட்டு நிதி

### அ) பிரயோக மற்றும் சமர்ப்பிக்கப்படும் பண அலகு

இந்த நிதியத்தின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உருப்படிகள் இந்த நிறுவனம் செயற்படும் முதனிலை பொருளாதார சூழலில் பண அலகினால் (பிரயோக பண அலகு) அளவிடப்படும். நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அது கம்பனியின் பிரயோக மற்றும் சமர்ப்பிக்கப்படும் பண அலகாகும்.

### ஆ) கொடுக்கல்வாங்கல்கள் (பரிமாற்றல்கள்) மற்றும் இருப்புக்கள்

வெளிநாட்டுப் பண அலகுகளினால் மேற்கொள்ளப்படும் பரிமாற்றல்கள், குறிப்பிட்ட பரிமாற்றல்கள் மேற்கொள்ளப்படும் தினங்களில் வலுவில் இருக்கும் செலாவணி வீதங்களைப் பயன்படுத்தி பிரயோக பண அலகிற்கு பரிமாற்றப்படும். அவ்வாறான கொடுக்கல்வாங்கல்களைத் தீர்க்கும்போது மற்றும் வெளிநாட்டு பிரயோக பண அலகுகளினால் மேற்கொள்ளப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கொடுக்கல்வாங்கல்களின்போது பெறுபேறான அந்நிய செலாவணி இலாபம் மற்றும் நட்டம் விபரமான வருமானக் கூற்றில் இனங்கண்டுகொள்ளப்படும். நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் இருப்புக்கள் ஆண்டிறுதி இறுதி செலாவணி வீதத்திற்கமைய பரிமாற்றப்படும்.

## 3.5 வரி விதிப்புக்கள்

### 3.5.1 நிலவும் வரி விதிப்புக்கள்

நிலவும் மற்றும் முன் காலப் பகுதிக்காக நிலவும் வருமான வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வருமான வரி ஆணையாளரிடமிருந்து பெறப்பட வேண்டிய அல்லது அந்தத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிதி அளவின் அடிப்படையிலேயே கணக்கிடப்படுகின்றது. இந்த அளவுகளைக் கணக்கிடுவதற்காக அறிக்கைப்படுத்தப்படும் தினத்திற்கு முன்னரிலிருந்து அமுல்படுத்தப்பட்ட அல்லது அன்றைய தினமன்று அமுல்படுத்தப்படும் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள வரி வீதம் மற்றும் வரிச் சட்டங்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றது

நம்பிக்கை நிதியத்திற்கான வருமான வரி நிதி ஏற்பாட்டு அடிப்படை கீழுள்ளவாறாகும்.

**அ) மஹபொல நம்பிக்கை நிதியம்**

1981 இன் 66 ஆம் இலக்க மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியச் சட்டத்திற்கமைய மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் வருமான வரியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

### 3.5.2 ஒத்திவைக்கப்பட்ட வரிகள்

அறிக்கைப்படுத்தும் திகதியன்று சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் வரி அடிப்படைகள் மற்றும் நிதி அறிக்கைப்படுத்தல் அலுவல்களுக்காக அவற்றின் ஏற்புப் பெறுமதிகளிடையே தற்காலிக மாற்றத்தின் அடிப்படையில் பொறுப்புக்கள் முறையை பயன்படுத்தி ஒத்திவைக்கப்பட்ட வரி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

வரி அறவிட முடியுமான அனைத்து தற்காலிக மாற்றங்களுக்காக ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் இனங்கண்டு கொள்ளப்படும்.

அனைத்து குறைக்க முடியுமான தற்காலிக மாற்றங்களுக்காக ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் இனங்கண்டு கொள்ளப்படுவதுடன், பயன்படுத்தப்படாத வரிக் கடன் மற்றும் வரி நட்டங்களில் குறைக்க முடியுமான தற்காலிக மாற்றம் மற்றும் எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு வரி அறவிட முடியமான இலாபம் கிடைக்கும் நிகழ்தகவு நிலவும் வரை பயன்படுத்தப்படாத வரிக் கடன்கள் மற்றும் வரி நட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கான வாய்ப்பு உண்டு.

## 3.6 காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்

காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளாக கையிருப்பிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள பணம், கையகப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைந்த காலப் பகுதிக்குள் ஆரம்ப முதிர்ச்சியடையும் தினத்தினைக்கொண்ட உயர் திரவத்தன்மையைக் கொண்ட ஏனைய குறுகிய கால முதலீடுகள் உள்ளடக்கப்படுகின்றது. வங்கி மிகைப்பற்று வசதிகள் ஐந்தொகையில் (இருப்புப் பத்திரத்தில்) நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 4 நிதிசார் உபகரணங்கள் - ஆரம்பத்தில் இனங்காணல் மற்றும் பின்னர் மேற்கொள்ளப்படும் அளவீடுகள்

### 4.1 நிதிச் சொத்துக்கள்

#### 4.1.1 நிதிச் சொத்துக்களை வகைப்படுத்தல் மற்றும் அளவீடு

2018 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் நியமம் 9 (SLFRS 9) இற்கமைய, சொத்துக்கள் முகாமைத்துவத்திற்கான வர்த்தக மாதிரியின் அடிப்படையில் மஹபொல நம்பிக்கை நிதியத்தினால் அதன் அனைத்து நிதிசார் சொத்துக்கள் கீழ் குறிப்பிடப்படும் விதங்களில் ஒன்றாக மேற்கொள்ளப்படுகின்றது.;

- பெறுமானத் தேய்வுக் கிரயம்
- ஏனைய விபரமான வருமானத்தின் ஊடான நியாயமான பெறுமதி (FVOCI)
- இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயமான பெறுமதி (FVTPL)

நிதிசார் சொத்துக்களில் பின்னர் ஏற்படும் அளவீடுகள் அவற்றின் வகைப்படுத்தலின் அடிப்படையில் தங்கியுள்ளது.

#### 4.1.2 பெறுமானத் தேய்விற்கமைய அளவீடு செய்யப்பட்ட நிதிசார் சொத்துக்கள்

நிதிசார் சொத்தொன்று கீழ் குறிப்பிடப்படும் இரண்டு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யுமாயின் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியின் (FVTPL) அடிப்படையில் பெயர் குறிப்பிடப்படாதிருப்பின் இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் நியமம் 9 (SLFRS 9) இற்கமைய அந்த நிதிச் சொத்து பெறுமதி தேய்வுக் கிரயத்திற்கமைய அளவீடு செய்யப்படும்.:

- ஒப்பந்த அடிப்படையிலான காசுப் பாய்ச்சலை ஒன்றுசேர்த்தல் மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்வதன் ஊடாக தனது நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்ளும் வர்த்தக மாதிரியினுள் சொத்துக்களைக் கொண்டிருக்கும்போது; மற்றும்

- வெறுமனே மூலதனத்திற்காக மற்றும் நிலுவை மூலதனத்தின் அடிப்படையில் வட்டியைச் செலுத்தல் விதத்திலான காசுப் பாய்ச்சல்கள் ஒரு குறிப்பிட்ட தினமொன்றினுள் எழும் நிதிசார் சொத்துக்களின் ஒப்பந்த அடிப்படையிலான நிபந்தனைகள்.

#### 4.1.3 ஏனைய விபரமான வருமானத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு (FVOCI) அளவீடு செய்யப்பட்ட நிதிசார் சொத்துக்கள்

ஏனைய விபரமான வருமானங்களின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு அளவீடு செய்யப்பட்ட நிதிசார் சொத்துக்களாக ஏனைய விபரமான வருமானங்களின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு அளவிடப்பட்ட கடன் மற்றும் பங்கு உபகரணங்கள் உள்ளடக்கப்படும்.

இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் நியமம் 9 (SLFRS 9) இற்கமைய ஏனைய விபரமான வருமானங்களின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு அளவிடப்பட்ட கடன் மற்றும் உபகரணங்கள் மற்றும் ஏனைய விபரமான வருமானங்களின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு பெயர் குறிப்பிடப்பட்ட பங்கு உபகரணங்களை இது உள்ளடக்கியுள்ளது.

**4.1.4 ஏனைய விபரமான வருமானங்களின் ஊடாக நியாயமான பெறுமதிக்கமைய (FVOCI) கடன் உபகரணங்கள்**

கடன் உபகரணமொன்று கீழ் குறிப்பிடப்படும் இரண்டு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யுமாயின் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியின் (FVTPL) அடிப்படையில் பெயர் குறிப்பிடப்படாதிருப்பின், அக்கடன் உபகரணம் ஏனைய விபரமான வருமானத்தின் ஊடாக நியாயமான பெறுமதி (FVOCI) இற்கமைய ஊடாக நியாயமான பெறுமதிக்கமைய இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் நியமம் 9 (SLFRS 9) இற்கமைய அந்த நிதிச் சொத்து பெறுமதி தேய்வுக் கிரயத்திற்கமைய அளவீடு செய்யப்படும்.:

- ஒப்பந்த அடிப்படையிலான காசுப் பாய்ச்சலை ஒன்றுசேர்த்தல் மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்வதன் ஊடாக தனது நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்ளும் வர்த்தக மாதிரியினுள் சொத்துக்களைக் கொண்டிருக்கும்போது; மற்றும்

- வெறுமனே மூலதனத்திற்காக மற்றும் நிலுவை மூலதனத்தின் அடிப்படையில் வட்டியைச் செலுத்தல் விதத்திலான காசுப் பாய்ச்சல்கள் ஒரு குறிப்பிட்ட தினமொன்றினுள் எழும் நிதிசார் சொத்துக்களின் ஒப்பந்த அடிப்படையிலான நிபந்தனைகள்.

ஏனைய விபரமான வருமானங்களின் ஊடாக நியாயமான பெறுமதியில் நிலவும் கடன் உபகரணங்கள், ஏனைய விபரமான வருமானங்களில் இனங்கண்டு கொள்ளப்படும் நியாயமான பெறுமதி மாற்றமடைவதனால் எழும் இலாபம் அல்லது நட்டத்தின் பின்னர் நியாயமான பெறுமதிக்கமைய அளவீடு செய்யப்படும். வட்டி வருமானம் மற்றும் எதிர்பார்க்கும் பொறுப்புக்கள் நட்டம் மற்றும் மாற்றங்கள் இலாபம் மற்றும் நட்டத்தினுள் இனங்கண்டு கொள்ளப்படும். முன்னைய ஏனைய விபரமான வருமானத்தினுள் இனங்கண்டுகொள்ளப்பட்ட திரட்டிய இலாபம் அல்லது நட்டம் இனங்கண்டுகொள்ளலை நீக்கும்போது ஏனைய விபரமான வருமானங்களிலிருந்து இலாபம் மற்றும் நட்டத்திற்கு மீள வகைப்படுத்தப்படும். இதற்கு முன்னர் இலங்கை கணக்கீட்டு நியமம் 39 (LKAS 39) இன் கீழ் விற்பனைக்காக வகைப்படுத்தப்பட்ட அரசாங்க பாதுகாப்புப் பத்திரங்களை இது கொண்டுள்ளது.

**4.1.5 ஏனைய விபரமான வருமானத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கமைய பங்கு கருவிகள்**

இலங்கை கணக்கீட்டு நியமம் 32 (LKAS 32) இல் "நிதிச் சான்றுப் பத்திரம் : சமர்ப்பித்தல்" இன் கீழ் பங்கு எனும் பதத்தினை வரைவிலக்கணப்படுத்துவதற்காக இயைந்து செல்லும் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக வைத்துக்கொள்ளப்படாத பங்கு உபகரணங்களில் மூலோபாய ரீதியிலான அலுவல்களுக்காக வைத்துக்கொள்ளப்பட்ட பங்குகளை முதலீடுகளின் ஒரு பகுதியை ஆரம்ப இனங்காணலின் பின்னர், ஏனைய விபரமான வருமானங்களின் ஊடாக நியாயமான பெறுமதிக்கமைய (FVOCI) கடன் கருவிகளாக தடைசெய்ய முடியாத பிரகாரம் வகைப்படுத்துவதற்கு சிலவேளை கம்பனியினால் தீர்மானிக்கப்படும். அவ்வாறான வகைப்படுத்தல் கருவியிலிருந்து கருவிக்கு எனும் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

இந்த பங்குக் கருவிகளின் இலாபம் மற்றும் நட்டம் ஒருபோதும் இலாபம் அல்லது நட்டத்தின் கீழ் கொள்ளப்படாதிருப்பதுடன் அதற்குப் பதிலாக அந்த இனங்காணலை அகற்றும் சந்தர்ப்பத்தில் நிறுத்திவைக்கப்பட்ட ஈட்டல்களுக்கு நேரடியாக மாற்றப்படும். செலுத்துவதற்கான உரிமை தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் இலாபம் அல்லது நட்டமாக ஏனைய செயற்பாட்டு வருமானங்களின் கீழ் இனங்கண்டுகொள்ளப்படும். ஏனைய விபரமான வருமானங்களின் ஊடாக நியாயமான பெறுமதியின் கீழான கடன் கருவிகள் சேதம் தொடர்பான ஆய்வுக்கு உட்படுத்தப்பட மாட்டாது. இதற்கு முன்னர் இலங்கை கணக்கீட்டு நியமத்தில் 39 (LKAS 39) "விற்பனைக்கு நிலவும்" இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட விலை குறிப்பிடப்படாத உரிமைப் பங்குகளை இந்தக் கருவிகள் கொண்டிருக்கும்.

**4.1.6 இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கமைய அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள்**

இலங்கை கணக்கீட்டு நியமம் 9 (SLFRS 9) இற்கமைய, பெறுமதி தேய்வுக் கிரயம் அல்லது ஏனைய விபரமான வருமானங்களின் ஊடாக நியாயமான பெறுமதிக்கமைய வகைப்படுத்தப்பட்ட நிதிசார் சொத்துக்கள் தவிர ஏனைய அனைத்து நிதிசார் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும். வர்த்தக நோக்கத்திற்காக நிறுத்திவைக்கப்பட்ட அல்லது முகாமைப்படுத்தப்படும் மற்றும் ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை ஒன்றுசேர்ப்பதற்கு ஏற்றிராததைப் போன்றே காசுப் பாய்ச்சல்களை ஒன்றுசேர்ப்பதற்கு மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்தல் போன்ற இரண்டு அலுவல்களையும் கொண்டிருக்காமையினால் அதன் செயலாற்றுகை நியாயமான பெறுமதியின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் ஆரம்ப இனங்காணலின் பின்னர் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கமைய நிதிச் சொத்துக்களுக்குள் உள்ளடக்கப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கமைய நிதிச் சொத்துக்களின் கீழ் இலங்கை கணக்கீட்டு நியமம் 39 (LKAS 39) இற்கமைய, வர்த்தக நோக்கத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கமைய பெயர் குறிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் உள்ளடக்கப்படும்.

## 4.2 நிதிசார் பொறுப்புக்கள்

### 4.2.1 நிதிசார் பொறுப்புக்கள் வகைப்படுத்தல் மற்றும் பின்னரான அளவீடுகள்

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 (SLFRS 9) இற்கமைய, நிதிசார் பொறுப்புக்கள் கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் வகைப்படுத்தப்படும்.

- இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கமைய நிதிசார் பொறுப்புக்கள், மற்றும்
  - வர்த்தக நோக்கத்திற்காக நிறுத்திவைக்கப்பட்டவை அல்லது
  - இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு பெயர் குறிப்பிடப்பட்டவை

என வகைப்படுத்தப்படும்.

- பெறுமானத் தேய்விற்கமைய அளவீடு செய்யப்பட்ட நிதிசார் பொறுப்புக்கள்

  நிதிசார் பொறுப்புக்களின் பின்னரான அளவீடுகள் அவற்றின் வகைப்படுத்தலின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 (SLFRS 9) ஊடாக நிதிசார் பொறுப்புக்கள் வகைப்படுத்தலுக்காக இலங்கை கணக்கீட்டு நியமம் 39 (LKAS 39) இல் நிலவும் தேவைகள் அநேகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

### 4.2.2 இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கமைய நிதிசார் பொறுப்புக்கள்

வர்த்தக நோக்கத்திற்காக நிறுத்திவைக்கப்பட்ட நிதிசார் பொறுப்புக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கமைய ஆரம்ப இனங்காணலின் பின்னர் பெயர் குறிப்பிடப்பட்ட நிதிசார் பொறுப்புக்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கமைய நிதிசார் பொறுப்புக்களின் கீழ் உள்ளடக்கப்படுகின்றது. இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கமைய பெயர் குறிப்பிடப்படாத நிதிசார் பொறுப்புக்கள் பெறுமதி தேய்வுக் கிரமத்திற்கமைய நிதிசார் பொறுப்பாக வகைப்படுத்தப்படும்.

## 4.3 நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புக்களை இனங்காணலை தவிர்த்தல்

### 4.3.1 நிதிச் சொத்துக்கள்

நிதிச் சொத்தொன்றின் ஊடாக பிறப்பிக்கப்படும் காசுப் பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த ரீதியிலான உரிமை முடிவுறுத்தப்படும்போது அல்லது கொடுக்கல்வாங்கலொன்றின் ஊடாக காசுப் பாய்ச்சலொன்றுக்கான உரிமையை ஒப்படைக்கும்போது நிதிச் சொத்தின் உரிமை தொடர்பாக கவனத்திற்கொள்ள வேண்டிய அனைத்து ஆபத்துக்கள் மற்றும் அனுகூலங்களை கம்பனியால் ஒப்படைக்கப்படும்போது அல்லது நிதிசார் சொத்தின் உரிமையுடன் தொடர்பாக கவனத்திற்கொள்ள வேண்டிய அனைத்து ஆபத்துக்கள் மற்றும் அனுகூலங்களை கம்பனியினால் ஒப்படைக்கப்படல் அல்லது நிறுத்திவைத்தலை மேற்கொள்ளாதபோது மற்றும் கம்பனியினால் நிதிசார் சொத்தொன்றின் நிர்வகிப்பை மேற்கொள்ளாதபோது போன்ற சந்தர்ப்பங்களில் கம்பனியினால் அந்த நிதிசார் சொத்தின் (அல்லது ஏற்புடைத்தாகும் பிரகாரம் அதன் ஒரு பகுதியின்) இனங்காணல் தவிர்த்துக்கொள்ளப்படும்.

சொத்தின் ஏற்பு பெறுமதி (அல்லது சொத்தின் இனங்காணலை தவிர்க்கும் பகுதியுடன் தொடர்புடைய ஏற்புப் பெறுமதி) மற்றும் பெறப்பட்டுள்ள மறுசீரமைப்புக்கள் (புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட புதிய சொத்துக்களிலிருந்து புதிதாக பொறுப்பேற்கப்படும் பொறுப்புக்களை கழித்ததன் பின்னர் அது உட்பட) என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு மற்றும் ஏனைய விபரமான வருமானத்தில் இனங்கண்டுகொள்ளப்படும் திரட்டிய இலாபம் / நட்டம், நிதசி சொத்தொன்றை இனங்காணலை தவிர்க்கும்போது இலாபம் அல்லது நட்டத்தில் இனங்கண்டுகொள்ளப்படும்.

அயினும் ஏனைய விபரமான வருமானங்களின் ஊடாக நியாயமான பெறுமதிக்கமைய பெயர் குறிப்பிடப்படும் பங்குகள் முதலீட்டுப் பாதுகாப்புக்களுடன் தொடர்பாக ஏனைய விபரமான வருமானத்தில் இனங்கண்டுகொள்ளப்படும் திரட்டிய இலாபம்/ நட்டம், அவ்வாறான பிணையப் பத்திரங்களில் இனங்காணல்களை தவிர்க்கும்போது இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 (SLFRS 9)இற்கமைய இலாபம் அல்லது நட்டங்களின்போது இனங்கண்டுகொள்ளப்பட மாட்டாது.

கம்பனியினால் உருவாக்கப்படும் அல்லது நிறுத்திவைக்கப்பட்ட, இனங்காணலை தவிர்த்துக்கொள்வதற்காக தகைமை பெறும் ஒப்படைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களுடன் தொடர்புடைய எந்த வகையான உரிமையொன்று இருப்பின் அது வேறான சொத்து அல்லது பொறுப்பாக இனங்கண்டுகொள்ளப்படும்.

நிதி நிலைமைக் கூற்றில் இனங்கண்டுகொள்ளப்படும் சொத்துக்களை மாற்றுவதற்காக கம்பனி கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்டாலும் மாற்றப்பட்ட சொத்துக்களில் அல்லது அதன் ஒரு பகுதியில் அனைத்து அல்லது குறிப்பிடத்தக்களவு அனைத்து ஆபத்துக்கள் மற்றும் அனுகூலங்களை நிறுத்திவைத்தல்கள் மேற்கொள்ளப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது மாற்றப்படும் சொத்துக்களில் இனங்காணல் தவிர்க்கப்படல் மேற்கொள்ளப்பட மாட்டாது.

சொத்துக்கள் மூன்றாம் தரப்பொன்றுக்கு மாற்றப்படும் சொத்துக்களின் சம கால மொத்த ஈட்டல்கள் பரிமாறப்படும் பிரகாரம் விற்பனையை மேற்கொள்ளும்போது அது விற்பனை மற்றும் மீள் கொள்வனவுக் கொடுக்கல்வாங்கலொன்றுடன் சமமான வகையில் பாதுகாக்கப்பட்ட நிதிசார் கொடுக்கல்வாங்கலொன்றாக கணக்கு வைக்கப்படும். அதற்கான காரணம், கம்பனியால் அந்த சொத்துக்களின் உரிமையின் அனைத்து அல்லது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து ஆபத்துக்கள் மற்றும் அனுகூலங்களை தக்க வைத்துக்கொள்வதாகும்.

கம்பனியினால் சொத்தொன்றின் ஊடாக காசுப் பாய்ச்சலொன்றைப் பெற்றக்கொள்வதற்கான தனது உரிமையை ஒப்படைக்கும்போது அல்லது ஒப்படைப்பதற்கான ஏற்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளல் மற்றும் சொத்தொன்றின் குறிப்பிடத்தக்களவு அனைத்து ஆபத்துக்கள் மற்றும் அனுகூலங்களை ஒப்படைத்தல் அல்லது தக்கவைத்துக்கொள்ளல் மேற்கொள்ளப்படாமை அல்லது சொத்தை நிர்வகிக்கும் அலுவல் ஒப்படைக்கப்பட்டிராதபோது சொத்து சம்பந்தமாக கம்பனியின் தொடர்ந்தேர்ச்சியான தொடர்பு நிலவும் வரையறை வரை அந்த சொத்து இனங்கண்டுகொள்ளப்படும். அச் சந்தர்ப்பத்தில் கம்பனியினால் சம்பந்தப்பட்ட பொறுப்புக்கள் இனங்கண்டு கொள்ளப்படும்.கம்பனியினால் தக்கவைத்துக்கொள்ளப்படும் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படும் அடிப்படையில் உரிமை மாற்றம் செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பொறுப்புக்கள் அளவிடப்படும்.

**4.3.2 நிதிசார் பொறுப்புக்கள்**

நிதிசார் பொறுப்பொன்றின் ஒப்பந்தப் பொறுப்பை நிறைவேற்றும்போது அல்லது இரத்துச் செய்யப்படும்போது குறிப்பிட்ட காலம் முடிவடைந்ததன் பின்னர் கம்பனி நிதிசார் பொறுப்பை இனங்கண்டு கொள்வதனைத் தவிர்த்துக்கொள்ளும்.

**4.3.3 நிதிசார் கருவிகளை பதிலீடு செய்தல்**

நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புக்களை பதிலீடு செய்து அதன் தேறிய பெறுமதியை நிதிக் கூற்றில் இனங்காணப்பட்ட பெறுமதிகளை பதிலீடு செய்தல் நடப்பில் செயல்வலுப்பெறச் செய்ய முடியுமான சட்ட ரீதியிலான உரிமையொன்று இருப்பின் மாத்திரம் அறிக்கைப்படுத்தப்படுவதுடன், தேறிய அடிப்படையில் தீர்ப்பதற்கு அல்லது கைத்தேறியதாக்கிக் கொள்வதற்கு மற்றும் அதற்கு இணையான வகையில் பொறுப்புக்களை நிறைவு செய்வதற்கு விரும்பினால் மாத்திரமே மேற்கொள்ளப்படும்.

வருமானம் மற்றும் செலவுகள் இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் நியமங்கள் ஊடாக அனுமதி வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் அல்லது கம்பனியின் வர்த்தக நடவடிக்கைகள் போன்ற சமமான விதத்திலான கொடுக்கல்வாங்கல்கள் குழுமத்தினால் பெறுபேறாக அமையும் இலாபம் மற்றும் நட்டத்திற்கு மாத்திரம் தேறிய அடிப்படையில் முன்வைக்கப்படுகின்றது.

## 5. பொறுப்புக்கள் மற்றும் நிதி ஏற்பாடு

### 5.1 பொறுப்புக்கள்

**5.1.1 ஓய்வூதிய அனுகூலங்கள் பொறுப்பு**

**5.1.2 நிச்சயிக்கப்பட்ட அனுகூலத் திட்டங்கள் - ஓய்வுப் பணிக்கொடை**

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டுக் கொள்கைக்கு இணங்க அனைத்து ஊழியர்களுக்கும் முதலாம் வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் ஓய்வுப் பணிக்கொடைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. ஆய்னும் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின் கீழ் ஊழியர் ஒருவருக்கு 05 வருடங்கள் பூர்த்தியடைந்ததன் பின்னரே பொறுப்பு உருவாகின்றது. இந்தப் பொறுப்பு, சேவைக் காலத்திற்குரிய மொத்த வருடங்களுக்கும் மாதச் சம்பளத்தின் அரைவாசி என்ற வீதத்தின் அடிப்படையிலேயே கணக்கிடப்படுகின்றது. இந்த விடயம் நிதி நிலைமைக் கூற்றில் ஊழியர் அனுகூலங்கள் பொறுப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பணிக்கொடை பொறுப்புக்காக வெளிவாரியாக நிதியீட்டல் மேற்கொள்ளப்படுவதில்லை.

### 5.1.3 நிச்சயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

மஹபொல நம்பிக்கை நிதியத்தினால் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் குறிப்பிட்ட சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய ஏற்புடைய பங்களிப்பு நிதி ஏற்பாடுகளினால் மேற்கொள்ளப்படுகின்றது. உழியர்களை உள்ளடக்கிய வகையில் பங்களிப்புத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகையை செலுத்துவதற்கான பொறுப்புக்கள் வருமானக் கூற்றில் செலவாக இனங்கண்டு கொள்ளப்படுகின்றது.

**ஊழியர் சேமலாப நிதியம்**

நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியரால் முறையே ஊழியரின் மாதச் சம்பளத்தின் 15% மற்றும் 10% என்ற ரீதியில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

**ஊழியர் நம்பிக்கை நிதியம்**

ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ஊழியரின் மாதச் சம்பளத்தின் 3% பங்களிப்பை மஹபொல நம்பிக்கை நிதியத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## 5.2 நிதி ஏற்பாடு

கடந்த கால நிகழ்வொன்றின் பெறுபேறாக வங்கிக்கு நிகழ்கால பொறுப்பொன்று (சட்ட ரீதியான அல்லது வழக்கமாக) நிலவுகையில் அந்தப் பொறுப்பை தீர்ப்பதற்காக பொருளாதார அனுகூலங்களைக் கொண்ட வளங்கள் வெளியே செல்வதற்கான வாய்ப்பு நிலவுகையில் மற்றும் பொறுப்பின் அளவு சம்பந்தமாக நம்பகமான மதிப்பீடொன்றை மேற்கொள்ள முடியுமாக இருக்கையில் நிதி ஏற்பாடு இனங்கண்டுகொள்ளப்படும். கம்பனியினால் சில அல்லது சகல நிதி ஏற்பாட்டை ஈடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் உதாரணமாக காப்புறுதி ஒப்பந்மொன்றின் கீழ் எனில் ஈடு செய்தல் வேறான சொத்தொன்றின் கீழ் இனங்கண்டுகொள்ளப்பட்டாலும் ஈடு செய்தல் உண்மையிலேயே உறுதியாயின் மாத்திரமே அவ்வாறு மேற்கொள்ளப்படும். எந்த விதத்திலும் நிதி ஏற்பாட்டுடன் தொடர்பான செலவுகள், ஏதேனும் ஈடு செய்தல் இருப்பின் அதனை கழித்து வருமானக் கூற்றில் முன்வைக்கப்படுகின்றது.

பணத்தின் காலப் பெறுமதியின் தாக்கம் போதுமானதாயின் பொறுப்புக்களுக்கான ஆபத்துக்களை ஏற்புடைய பிரகாரம் சுட்டிக்காட்டும் நடப்பு வரி வீதத்தினைப் பயன்படுத்தி நிதி ஏற்பாடு தள்ளுபடி செய்யப்படும். தள்ளுபடி பயன்படுத்திக்கொள்ளப்படும்போது செலவிடப்படும் காலத்திற்கமைய அதிகரிக்கும் நிதி ஏற்பாடு அதிகரிப்பு நிதிசார் கிரயமொன்றாக இனங்கண்டு கொள்ளப்படும்.

6. வருமானம் மற்றும் செலவுகள்

6.1 வருமானத்தை இனங்காணல்

2018 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 (SLFRS 15) ஊடாக, வருமானம் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 18 (LKAS 18) மற்றும் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தப் பணி தொடர்பாகஇலங்கை கணக்கீட்டு நியமம் 11 (LKAS 11) மற்றும் சர்வதேச நிதி அறிக்கையிடல் ஆய்வுக் குழுவின் நுகர்வோரின் ஆர்வம் சம்பந்தமான IFRIC 13 உம் உட்பட்ட வருமானத்தை இனங்கண்டு கொள்ளும் வழிகாட்டல்கள் மீளமைக்கப்பட்டுள்ளன.

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 (SLFRS 15) ஊடாக வருமானத்தை இனங்கண்டு கொள்வதெப்படி? மற்றும் எந்தளவு என்ற ரீதியில் எந்தத் திகதிக்கு என்பது பற்றி நிர்ணயித்துக் கொள்வதற்காக முழுமையான மாதிரியான்று வழங்கப்படும். எந்தத் திகதியில் வருமானம் இனங்கண்டுகொள்ளப்படுகின்றதெனவும் எந்தளவு பெறுமதியில் என்பதனை நிர்ணயித்துக்கொள்வதற்காக நிறுவனம் ஐந்து கட்டங்களைக் கொண்ட படிவமொன்றைப் பயன்படுத்திக்கொள்ளல் அவசியமாகும். எந்தத் திகதியில் வருமானம் இனங்காணப்படுகின்றது அல்லது நிறுவனத்திற்காக எதிர்பார்க்கப்படும் உரிமையின் கீழ் எந்தப் பெறுமதியில் நுகர்வோருக்கு பொருட்கள் மற்றும் சேவைகளின் நிர்வகிப்பை ஒப்படைத்தல் என்பது மற்றும் எந்தத் தினத்தில் என்பது நம்பிக்கை நிதியத்திற்கு பொருளாதார அனுகூலங்கள் வருவதனை எதிர்பார்க்கலாமென்பது மற்றும் செலுத்தப்பட்ட திகதி எதுவாயினும் வருமானம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட அல்லது ஏற்க வேண்டிய சம்பந்தப்பட்ட செலவுகளை நம்பகமான விதத்தினாலான அளவீடு இந்த மாதிரியின் ஊடாக நிர்ணயிக்கப்படுகின்றது. ஒப்பந்த அடிப்படையிலான நிச்சயிக்கப்பட்ட செலுத்தல் நிபந்தனைகளையும் கவனத்திற்கொண்டு பெறப்பட்டுள்ள மற்றும் பெற வேண்டிய மறுசீரமைப்புக்களுடன் தொடர்பான நியாயமான பெறுமதியின் அடிப்படையில் வருமானம் அளவிடப்படுகின்றது.

6.1.1 வட்டி வருமானம்

பெறுமானத் தேய்வுக் கிரயத்திற்கமைய அளவீடு செய்யப்பட்ட அனைத்து நிதிசார் கருவிகள் மற்றும் அவற்றை விற்பனை செய்வதற்காக நிலவும் வகைப்படுத்தப்பட்ட வட்டியைக் கொண்டுள்ள நிதிசார் சொத்துக்களின் மீதான வட்டி வருமானம் அல்லது செலவுகள் பயன்தரும் வட்டி வீதத்தின் அடிப்படையிலேயே அறிக்கைப்படுத்தப்படும். (EIR) பயன்தரும் வட்டி வீதம் என்றால் நிதிச் சொத்துக்களில் அல்லது பொறுப்புக்களின் தேறிய ஏற்புப் பெறுமதிக்கு நிதிசார் கருவிகளில் எதிர்பார்க்கும் ஆயுட்காலம் அல்லது குறுகிய காலப் பகுதிக்குள் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால பணச் செலுத்தல்கள் அல்லது கிடைப்பனவுகளுக்கமைய உண்மை நிலைமையில் தள்ளுபடி செய்யப்பட்ட வீதமாகும். வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்திற்குள் வட்டி வருமானம் உள்ளடக்கப்படும்.

6.1.2 ஏனைய வருமானங்கள்

ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் இனங்கண்டுகொள்ளப்படுகின்றது.

6.2 செலவுகள்

வர்த்தகத்தை நடாத்துவதற்கு செலவு செய்யப்படும் அனைத்து செலவுகளும் செலவுக்குரிய ஆண்டிற்காக இலாபத்தை கணக்கிடும்போது வருமானத்தில் அறவிடப்படும். பழுதுபார்ப்புக்கள் மற்றும் புதுப்பித்தல்கள் குறிப்பிட்ட செலவு மேற்கொள்ளப்பட்ட ஆண்டுடன் தொடர்புடைய இலாபம் மற்றும் நட்டங்களில் அறவிடப்படும்.

**லலித் அத்துலத்முதலி மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்**
**2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**

| 7 | **வருமானம்** | **2018** | **2017** |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| | தேறிய வட்டி வருமானம் (NWCL மற்றும் MTF) - குறிப்பு 7.1 | 943,992,948 | 1,097,644,199 |
| | அபிவிருத்தி லொத்தர் சபையின் இலாபப் பங்கு | 904,600,387 | - |
| | SLIIT இடமிருந்து பெறப்பட்ட வாடகை | 20,000,000 | 20,000,000 |
| | | **1,868,593,335** | **1,117,644,199** |

| | | **2018** | **2017** |
|---|---|---|---|
| **7.1** | NWCL ஊடாக முகாமைப்படுத்தப்படும் முதலீட்டு பட்டியலுக்கான தேறிய வட்டி | ரூ. | ரூ. |
| | **ஏனைய வட்டி** | | |
| | NWCL முதலீட்டுப் பட்டியல் - முதலீட்டு வருமானம் | 758,219,849 | 913,920,262 |
| | MTF - முதலீட்டு வருமானம் | 185,773,099 | 183,723,937 |
| | | **943,992,948** | **1,097,644,199** |

**8 நேரடிச் செலவுகள்**

| | **2018** | **2017** |
|---|---|---|
| **புலமைப்பரிசில் மானியச் செலவுகள்** | ரூ. | ரூ. |
| புலமைப்பரிசில் செலுத்தல் - பல்கலைக்கழகம் | 1,269,525,962 | 1,161,627,224 |
| புலமைப்பரிசில் செலுத்தல் - தொழில்நுட்ப நிறுவகங்கள் | 47,040,200 | 76,028,800 |
| புலமைப்பரிசில் செலுத்தல் - ஏனைய உயர் கல்வி நிறுவகங்கள் | 6,693,400 | 17,918,804 |
| புதிய புலமைப் பரிசில் வழங்கல் செலவு | 2,307,228 | 754,200 |
| | **1,325,566,790** | **1,256,329,028** |

| 9 | **ஏனைய வருமானங்கள்** | **2018** | **2017** |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| | பணியாட் தொகுதி கடனுக்கான வட்டி | 45,384 | 44,610 |
| | விளம்பர வருமானம் | - | 2,498,399 |
| | உதவிகள் | 15,000 | 250,000 |
| | அறவிடப்பட்ட தொகை | 229,500 | 85,100 |
| | சிறு கட்டுநிதி | 5,825 | 20,523 |
| | நிலையான சொத்துக்களை அகற்றியதன் மூலமான வருமானம் | 3,457,750 | 8,000 |
| | | **3,753,459** | **2,906,632** |

லலித் அத்துலத்முதலி மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்
2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| 10 | நிர்வாக செலவுகள் | 2018 | 2017 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| | சம்பளம் | 9,233,460 | 6,150,141 |
| | வருகைக் கொடுப்பனவு | 457,125 | 301,000 |
| | மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவு | 466,319 | 250,685 |
| | ஊழியர் சேமலாப நிதியம் | 1,911,540 | 643,187 |
| | ஊழியர் நம்பிக்கை நிதியம் | 393,295 | 132,901 |
| | மீதி விடுமுறைகளுக்கான கொடுப்பனவு | 243,771 | 451,556 |
| | தேய்மானம் | 56,039,045 | 54,751,056 |
| | தபால் மற்றும் தொடர்பாடல் கட்டணம் | 612,556 | 345,498 |
| | பணிக்கொடை கொடுப்பனவுகள் | 999,218 | 805,422 |
| | நலனோம்புகைச் செலவுகள் | 191,467 | 58,440 |
| | தொலைபேசிக் கட்டணம் | 41,694 | 18,520 |
| | பயிற்சிக் கட்டணம் | - | 8,500 |
| | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கட்டணம் | 42,000 | 42,000 |
| | நம்பிக்கை பொறுப்பாளர் சபை அங்கத்தவர் கட்டணம் | 218,741 | 73,500 |
| | எரிபொருள், பயணச் செலவு மற்றும் பிழைப்புப் படி | 260,073 | 329,810 |
| | நீர் | - | 26,497 |
| | மின்சாரம் | 518,056 | 253,573 |
| | சுத்தப்படுத்தல் கட்டணம் | 70,566 | 114,750 |
| | பாதுகாப்புக் கட்டணம் | 269,000 | 231,500 |
| | அச்சிடல் கட்டணம் மற்றும் எழுதுபொருட்கள் | 578,928 | 434,895 |
| | பராமரிப்புச் செலவு | 148,151 | 82,379 |
| | கட்டிட வாடகை | 3,863,862 | 5,261,278 |
| | முறைமைகள் பராமரிப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப செலவுகள் | 27,566 | - |
| | உதவிகள் | 74,550 | - |
| | காப்புறுதி | 448,072 | 37,656 |
| | விளம்பரக் கட்டணம் | 181,844 | - |
| | பங்களிப்புக் கட்டணம் | 25,750 | - |
| | சிறு செலவுகள் | 92,519 | 344,310 |
| | வாகனக் குத்தகைக் கட்டணம் | 1,828,500 | 507,917 |
| | வாகனங்கள் பராமரிப்பு | 34,830 | 231,575 |
| | திறைசேரி பிணைப் பத்திர தவணைத் தொகை மற்றும் கழிவுகள் | 13,846,907 | |
| | WHT -நிலையான வைப்பு | - | 3,097,967 |
| | தொழில்சார் கட்டணம் | 2,064,503 | 63,050 |
| | வங்கிக் கட்டணம் | 35,485 | 28,747 |
| | | **95,219,392** | **75,078,310** |

**11 பாடசாலை அபிவிருத்திச் செலவுகள்**

| | 2018 | 2017 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| ரோயல் கல்லூரி, பொலன்னறுவை | - | 6,708,524 |
| புனித அந்தோனியர் கல்லூரி (விளையாட்டு மண்டபம்) | - | 6,573,000 |
| லலித் அத்துலத்முதலி ஞாபகார்த்த வைபவச் செலவுகள் | - | 580,288 |
| பழுதுபார்ப்புச் செலவுகள் | - | 2,821,573 |
| | **-** | **16,683,385** |

12 சொத்துக்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | 2018.01.01 ஆம் திகதியன்று மீதி | | | 2018.12.31 ஆம் திகதியன்று மீதி |
|---|---|---|---|---|
| **12.1** மொத்த ஏற்பு மதிப்பு | | கூட்டுக | கழிக்க | |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| செலவுகள் | | | | |
| கட்டிடங்கள் | 1,064,520,695 | - | - | 1,064,520,695 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 7,883,699 | 51,654 | - | 7,935,353 |
| அலுவலக உபகரணங்கள் | 1,479,585 | - | - | 1,479,585 |
| கணனி மற்றும் கருவிகள் | 4,918,839 | 1,950,991 | - | 6,869,830 |
| வாகனங்கள் | 5,100,000 | - | 5,100,000 | - |
| சொத்துக்களின் தேய்வுப் பெறுமதி | **1,083,902,818** | **2,002,645** | **5,100,000** | **1,080,805,463** |

| | 2018.01.01 ஆம் திகதியன்று மீதி | ஆண்டிற்கான அறவீடுகள் | அகற்றல்கள் | 2018.12.31 ஆம் திகதியன்று மீதி |
|---|---|---|---|---|
| **12.2** தேய்வுகள் | | | | |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| செலவு மற்றும் சேர்த்தல்கள் | | | | |
| கட்டிடங்கள் | 106,452,070 | 53,226,035 | - | 159,678,105 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 1,664,274 | 1,425,428 | - | 3,089,702 |
| அலுவலக உபகரணங்கள் | 280,267 | 277,342 | - | 557,609 |
| கணனி மற்றும் கருவிகள் | 2,480,869 | 1,110,240 | - | 3,591,109 |
| வாகனங்கள் | 5,100,000 | - | 5,100,000 | - |
| மொத்தத் தேய்வு | **115,977,480** | **56,039,045** | **5,100,000** | **166,916,525** |

| **12.3** தேறிய ஏட்டுப் பெறுமதி | **2018** | **2017** |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| செலவுகள் | | |
| கட்டிடங்கள் | 904,842,590 | 958,068,625 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 4,845,651 | 6,219,425 |
| அலுவலக உபகரணங்கள் | 921,976 | 1,199,318 |
| கணனி மற்றும் கருவிகள் | 3,278,721 | 2,437,970 |
| | | - |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கான மொத்த ஏற்புப் பெறுமதி | **913,888,938** | **967,925,338** |

| 13 | முதலீட்டுச் சொத்துக்கள் | 2018 | 2017 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| | அறுதிக் காணி (மாலபே இல் அமைந்துள்ள SLIIT நிறுவகத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட) | 12,460,179 | 12,460,179 |
| | | **12,460,179** | **12,460,179** |

குறிப்பு : மாலபே இல் அமைந்துள்ள இந்தக் காணியை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு(SLIIT) குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

| 14 | துணைக் கம்பனிகளில் முதலீடு | 2018 | 2017 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| | நெஷனல் வெல்த் கோப்பரேஷன் கம்பனி | 985,000,000 | 985,000,000 |
| | | **985,000,000** | **985,000,000** |

நெஷனல் வெல்த் கோப்பரேஷன் கம்பனி 100% மஹபொல உரிமையைக் கொண்ட கம்பனியொன்றாக நிறுவப்பட்டுள்ளது.

| 15 | ஏனைய முதலீடுகள் | 2018 | 2017 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| | அபிவிருத்தி லொத்தர் சபை | 2,200,000 | 2,200,000 |
| | | **2,200,000** | **2,200,000** |

| 16 | நிதிசார் சொத்துக்கள் | 2018 | 2017 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| | திறைசேரிப் பிணைப் பத்திரங்கள் ( NWCL ) | 6,066,033,082 | 3,959,606,109 |
| | திறைசேரிப் பிணைப் பத்திரங்கள் ( MTF ) | 1,175,944,253 | 1,189,791,160 |
| | திறைசேரிப் பிணைப் பத்திரங்கள் ( NWCL ) | 198,387,726 | 565,062,113 |
| | கடனீட்டுப் பத்திரம் | 1,284,047,982 | 1,111,305,960 |
| | சொத்துக்கள் பிணை வைப்பு | 448,227,563 | 221,626,055 |
| | வர்த்தக பரிவர்த்தணைப் பத்திரங்கள் | - | 621,358,828 |
| | நிலையான வைப்புக்கள் ( NWCL ) | 216,490,959 | 1,128,829,462 |
| | நிலையான வைப்புக்கள் ( MTF ) | 552,173,542 | 312,000,000 |
| | மீள் கொள்ளவனவு | 290,111,232 | 737,290,168 |
| | முகாமைத்துவக் கணக்கு | 984,911 | 14,569,535 |
| | | **10,232,401,250** | **9,861,439,390** |

| 17 முற்பணம் மற்றும் முற்கொடுப்பனவுகள் | 2018 | 2017 |
|---|---|---|
| | ரு. | ரு. |
| ஊழியர் கடன் மற்றும் முற்பணம் | 1,180,729 | 1,359,629 |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 399,000 | 399,000 |
| வாகனக் காப்புறுதி | - | 34,830 |
| புலமைப் பரிசில் தவணைத் தொகை கிடைப்பனவு | - | 4,400 |
| | **1,579,729** | **1,797,859** |

| 18 ஏனைய சொத்துக்கள் | 2018 | 2017 |
|---|---|---|
| | ரு. | ரு. |
| எழுது பொருட்கள் | 291,919 | - |
| வாடகை வைப்புப் பணம் - ஜயவர்தன நிலையம் | 1,647,000 | 1,647,000 |
| ச.தொ.ச | 348,810 | 348,810 |
| | **2,287,729** | **1,995,810** |

| 19 பெறப்பட வேண்டிய கணக்குகள் | 2018 | 2017 |
|---|---|---|
| | ரு. | ரு. |
| அபிவிருத்தி லொத்தர் சபை | 100,700,127 | - |
| நிலையான வைப்புக்கான வட்டி | 10,809,227 | 13,622,886 |
| திறைசேரிப் பிணைப் பத்திரங்களுக்கான வட்டி | 43,827,663 | 43,827,663 |
| வங்கி குறுகிய கால வைப்புக்கான வட்டி | 26,723 | - |
| | **155,363,740** | **57,450,549** |

| 20 காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 2018 | 2017 |
|---|---|---|
| | ரு. | ரு. |
| இலங்கை வங்கியின் நிறுவனக் கிளை கணக்கு இல.1791 | 1,976,911 | (13,280,364) |
| இலங்கை வங்கியின் முதலீட்டு வங்கிக் கிளை கணக்கு இல. - 83302834 | 2,616,323 | - |
| இலங்கை வங்கியின் கணக்கு இல. - 4079 | (984,911) | (14,569,535) |
| குறுகிய கால வைப்புக்கள் - இலங்கை வங்கி ( Overnight Deposit) | 137,000,000 | 35,000,000 |
| | **140,608,323** | **7,150,101** |

| 21 | ஓய்வூதிய அனுகூலங்களுக்கான கடப்பாடுகள் | 2018 | 2017 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| | ஆண்டின் ஆரம்பத்தில் மீதி | 2,173,542 | 1,368,120 |
| | ஆண்டிற்கான நிதி ஏற்பாடுகள் | 999,218 | 805,422 |
| | | **3,172,760** | **2,173,542** |

| 22 | அட்டுறு மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய கணக்குகள் | 2018 | 2017 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| | சொப்ட்லொஜிக் இன்போர்மேஷன் கம்பனி | 556,200 | - |
| | வர்ச்சுவல் ஹொஸ்ட்டின் | 25,347 | - |
| | தொலைபேசிக் கட்டணம் | 20,761 | - |
| | புலமைப் பரிசில் செலுத்தல் - பல்கலைக்கழகங்கள் | 109,966,050 | 14,943,250 |
| | புலமைப் பரிசில் செலுத்தல் - தொழில்நுட்ப நிறுவகங்கள் | 27,785,500 | 22,108,000 |
| | புலமைப் பரிசில் செலுத்தல் - ஏனைய நிறுவகங்கள் | 3,535,940 | 8,338,456 |
| | மேலதிக நேரக் கொடுப்பனவு | 22,632 | 33,962 |
| | வருகைக் கொடுப்பனவு | 174,125 | 26,500 |
| | பாடசாலை அபிவிருத்தி | 1,074,097 | 1,074,097 |
| | சம்பளம் மற்றும் வேதனம் | 74,250 | 606,980 |
| | நிறுத்தி வைப்புக்கள் | 1,547,409 | 1,547,409 |
| | நிறுத்தி வைப்புக்கள் - புனித அந்தோனியர் கல்லூரி | 382,417 | 382,417 |
| | நிறுத்தி வைப்புக்கள் - சேர் ஜோன் கொத்தலாவல கல்லூரி | 243,503 | 243,503 |
| | நீச்சல் தடாகச் செலவுகள - எம்பிலிப்பிட்டிய | 585,449 | 585,449 |
| | பாதுகாப்புக்கான செலுத்துகைகள் | 39,132 | - |
| | வருடாந்த விடுமுறை | 235,207 | - |
| | மின் கட்டணங்கள் | 37,395 | - |
| | த்ரீ லங்கா நிறுத்தி வைப்புக்கள் | - | 152,375 |
| | ஊழியர்களுக்கான செலுத்துகைகள் | - | 299,958 |
| | ஊழியர் சேமலாப நிதியச் செலுத்துகைகள் | - | 97,026 |
| | வாகனக் கூலி | - | 55,200 |
| | | **146,305,414** | **50,494,582** |